மீன் பாடும் தேன் நாடு



pax.ravichandra@gmail.co

Pax Ravichandra

30-1-2024

மீன்பாடும் தேன் நாடு-மட்டக்களப்பு	
இல	உள்ளடக்கம்
1	மீன் பாடும் தேன் நாடு
2	முள்வனத்து முட்கள்
3	மும்தாஜ் மஹால்
4	முறிந்த தோரணம்
5	முதல் முத்தம்
6	மையேந்தும் விழியாட
7	நடிகையர் திலகம்
8	நான் நீ அவன்
9	ஓ என் பாரத தாயே
10	ஒரு நதியின் கதை
11	பாடி அழைத்தேன் உன்னை
12	பார்வை
13	பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
14	பிரியமான தோழி
15	பொய்கையும் பூவையும்
16	பொன்மான்
17	பொன்மானைத் தேடி
18	பூவை
19	பொருளாதாரம்
20	பொற்குட பவனி
21	இராமாயணம்
22	சங்கே நீ முழங்கு
23	சாத்திரங்கள்
24	சிவப்பு விளக்கு
25	சுடரும் விட்டிலும்
26	சூடாத மலர்
27	சுவாசக்காற்று
28	தாஜ்மஹால்
29	தைப்பொங்கல்
30	தறியும் குழலும்
31	தாயே தெய்வம்
32	தேன்மலர்
33	உறவும் பிரிவும்
34	உதிரும் மலர்கள்
35	வண்ணப்பூச்செண்டு
36	வண்ணத்தமிழ் பெண்ணொருத்தி
37	விடியலில் வந்த வெண்ணிலா
38	விலக்கப்பட்ட கனி
39	யாரிடம் செல்வோம் இறைவா?
40	யாரிவள் தேவதை

மண் வாசனை-மட்டக்களப்பு

வட்டக்களரியில்-கட்டியம் ஒலிக்க
அண்ணாவியார் மத்தளம் ஆனந்தமாய் முழங்க
சலங்கைகள் குலுங்க, சண்டிக் காளையர்
துள்ளிச், சுற்றியாடும் வடமோடிக் கூத்துக்கள்

பௌர்ணமி நிலவில் விடியும் வரை தொடரும்
விடிந்த பின்னும் வாய்கள்-தா -தை
ததிங்கணத் தோம் என்றே சொல்லிட
பாதங்கள் தாமாய் ஆடும்.

கால்கள் ஆடக், காளையர் கண்கள், கயல்விழிகளில்
காதலைத் தூவிட, கள்ளச் சிரிப்போடு கன்னம் சிவக்க
காதலைச் சொல்லி நாணும் கன்னியர்-
காதலன் உணர்வோடு ஆடும் காளையர்

கூத்தாடும் அழகனை கண்களால் களவாடிப்
பூத்தாடும் குவளை விழிகள் நாணிச் சிரிக்க,
காளை நெஞ்சோ காதல் வானில்
வண்ணக் காற்றாடியாய் எழுந்து பறக்க
பூத்திடும் புது வசந்தங்கள்

கூத்துப் பார்த்த கூட்டத்தில், நேற்று பார்தவளை
சல்லடை போட்டுத் தேடி ஆடும் பாதங்கள்
கயல் விழிகள் போடும் காதல் தூண்டில்களில்
கயலாய்ச் சிக்கி ஆடும் காளையர் நெஞ்சங்கள்

பொட்டு வைத்த வட்ட நிலவை
வட்டக்களரியில் ஆடிடும் கண்கள் தேடும்
எட்டுப்போட்டு ஆடும் பாதங்கள்-அவள்
எண்ணத்தால் வாடிச் சோரும்

பிந்தி வந்த முழுநிலவோ பூவாய் சிரிக்க
கண்டு மகிழ்ந்த காளையோ எம்பிக் குதிக்க
கண்கள் தழுவி காதல் கூத்தாடும்.

நான்கு மதங்களும் நல்லுறவு கொண்டாட
-வாங்கொலி கேட்டு தொழச் செல்லும் முஸ்லீம்களுக்கு
சலாம் சொல்லும் தமிழர்.
ஞாயிறு பூசைக்கு செல்லும் கிறிஸ்தவரை
புன்னகை சூடி வாழ்த்தும் நீறணிந்த சைவர்

பௌர்ணமி நாளில் பிரித் ஒலிக்க
வெண்ணாடைப் பௌத்தருக்கு-பொன்னாடையாய்
புன்னகை போர்த்தும் தமிழர்

ஓடும் வாவியில் முகம் ஒளிர உலா வரும் வான் நிலா
தவளைகள் தொப், தொப் எனத் தாவி மேளம் தட்ட,
மீன்கள் பாடிடப் பொழியும் இசை மழையில், கயலும்,
மணலையும், வெள் இறாலும் துள்ளி விளையாடும்.

பச்சை வயற்காட்டில் தென்றலில் ஆடும் நெற்கதிர்கள்
பாலும் தயிரும், நெய்யும், காட்டுத்தேனும் ஓடும் நாட்டில்
கழுத்து மணி ஒலிக்க படுத்திருந்து அசைபோடும் நிரைகள்

புத்தாண்டை வரவேற்க-காலையிலே, நீச்சல், தோணி ,
சைகிள்-மரதன் ஓட்டப் போட்டிகள்.
மாலையிலே வழுக்கு மரம் ஏறிக் காளையர் வழுக்கிட
கடைக்கண்ணால் கன்னியர் காதல் மது ஊற்றி உசுப்பிட
வழுக்கியும், விடாமல் ஏறிக், காதல் கொடி பிடித்தவர்
மகிழ்ந்தே ஆரவாரிக்க கண்ணால் மலரும் காதல்கள்.
பெண்ணால் மலர்ந்திடும் புதுவாழ்வுகள்

அபூர்வமாய்த் தலைகாட்டி அதிசய வாக்கு சொல்லும்
குடுகுடுப்பைகாரன், கச்சான் வீசிட-வான்குடைாய்
காற்றில் உலாவரும் கச்சான் பூச்சிகள்
ஆவலாய் பிடித்து ஆசையாய் ஊதி-மீண்டும்
பறக்கவிடும் சிறுவர் சிறுமியர்.

பிள்ளையார் கட்டை, கிட்டிப் பொல்-ஜாடி
கிறிக்கட் எனக் கோயில் முற்றத்தில்
குதூகலமாய் விளையாடும் சிறுவர்

காளை பூட்டிய வண்டிகள் தேர்களாய் உலாவர
போடிமார் வயல்களில்-மலையாய் குவியும் நெற் குதிர்கள்.

பாம்பாட்டி குறவர் மகிழ்விக்க கூடும் கூட்டம்
காசு போட்டு மகிழக், குறவன் மனதிலோ கொண்டாட்டம்

மணிமாலை அணிந்த மயக்கும் கருவண்ணக் குறத்திகள்
“சாத்திரம் பாக்கலையோ சாத்திரம்”கூவியழைத்தே
காளையர் கை பிடித்து மனம் மயங்கச் சாத்திரம் சொல்லிட
குறத்தி கை தழுவிச் சாத்திரம் கேட்க கூடிடும்
குறும்புக் காளையர் கூட்டம் மற்றோர் பக்கம்.

பௌர்ணமி நாட்களில்-வெபர் அரங்கினில்
முத்தமிழும் குதூகலிக்க-மூவினமும் கண்டு மகிழ
உள்ளூர்க் கலைஞர்கள் அளிக்கும் முத்தமிழ் கலைவிழா

இரசிகர்கள் விசிலடிக்க தொடரும் உதைப்பந்தாட்டம்
கன்னியர் கடைக் கண்வீச்சுக்கு-கூட்டமாய்
காத்திருக்கும் இளவட்டம்

அந்தியில் அலைமோதும் கடலும் ஓய்ந்து களைப்பாற
வாவி களை கட்டிச் சதிராட, ஊற்றுப் பூங்காவில் கூடி
அரசியல் பேசும் பெரியோர் கூட்டம்.

துள்ளும் மீன்களை அள்ளிப் பிடிக்க துடிப்போடு உலாவும் தோணிகள்
விரிந்த குடையாய் வீழ்ந்த வலைகள், மீன், இறால்களை அள்ளிக் கொள்ள
தூண்டில் போடுவோர் வாழ்த்துச் சொல்ல எங்கும் மகிழ்ச்சி ஆராவாரம்

ஓடும் மீன்களை மண்டா எறிந்து பிடிக்கும் வீரரோ பாலத்தில்
நண்டு, மீன் கூடு பார்த்து உலா வரும் தோணிகளோ தூரத்தில்

மட்டியும், சினை நண்டும் மயக்கம் தர-
தென்னங் கள் போதை தர-மாலையில்
தெம்மாங்கு பாடும் முதியவர்கள்

குயில்கள் பாட-கொக்குகள் ஒற்றைக் காலில் தவமிருக்க,
கூட்டமாய் நீருக்குள் மூழ்கி
குதூகலமாய் மீன் பிடிக்கும் கடற்காகங்கள்
பட்டென்று பாய்ந்து- மீனை
சட்டென்று கவ்விப் பறக்கும் மீன் கொத்திகள்

வெண்மேகப் பட்டங்கள் விட்டு-வானில் நிலா உலா வர
ஓடும் வாவியில் ஒளி விளக்கோடு வலை வீசும் மீனவர்கள்
உல்லாசமாய் இரசிக்கும் வெளிநாட்டுப் பயணிகள்

விதைப்பிற்கும் அறுப்பிற்கும் ஒரு காலம்
மீனும் சினை நண்டும், மட் இறாலும் உண்ண ஒரு காலம்
பாலும், தயிரும் தேனும் எக்காலம்
காதலுக்கு பஞ்சமேயில்லாப் பருவகாலம்.

வடை, வறுத்த கடலை, சீவலை ‘சேட்டாவிடம்’’ வாங்கி
உண்டு வர, வழியில் கண்டு கதைபேசும் நண்பர் கூட்டம்
வாகை மரத்தடி பீடாக் கடையில் -வாய் சிவக்க
போடுவார் வாயில் வாசபீடாவின் கொண்டாட்டம்

கீழ்வானில் வண்ணக் கோலமிட்டு சூரியன் மறைய
பாடிக் களித்து-பல கதைபேசி-வானில்
கூட்டமாய் கூடு திரும்பும் கிளிகள்
காகங்கள்-வெண் நாரைகள்-கொக்குகள்.

அந்தியில் ஆற்றங்கரை களை கட்ட, ஏற்றிய பெட்ரோமெக்ஸ்
ஒளி சிந்தும் பூக்களாய் அழகிற்கு அழகு சேர்க்க
இறால் பிடிக்கும் மீனவர் வண்ண நிலைகள், பொத் பொத் என
விரிந்த மலராய் வாவியில் விழும் சின்ன வலைகள்.

வாங்கிட ஒரு கூட்டம், பார்த்து இரசிக்க ஒரு கூட்டம்
இரண்டாம் காட்சி கலைய
சினிமா பார்த்து வரும் இரசிகர் கூட்டம்.

ஆற்றங்கரை மணக்க-மனதை அள்ளிடக்
கனிந்த கிண்ணம்பழ மரங்கள். பருவத்தில் சந்தைக்கு
வரும் மா, பலா. ஈச்சை. முந்திரி, நாவல்,
வெள்ளரி பாலப்பழம் எனப் பல்வகைப் பழங்கள்

மாரியிலே மழை பொழிய, வாவியிலே வெள்ளம் பொங்க
உழுவை பிடிக்கும் சிறுவர் கூட்டம்-ஓடி வரும்
கயல் பிடிக்க , தோணிகளில் மீனவர் கூட்டம்

எழுவான் கரையில் தோன்றி, படுவான் கரையில் மறையும்
சூரிய உதயமும். அஸ்தமனமும்
நித்தம் பார்த்தும், பார்க்கச் சலிக்காத பரவசங்கள்

அந்திச் சூரியன்-அழகிய செங்கோளமாய் கீழ்வானில் காட்சி தர
கதிர்கள் வானிலும் வாவியிலும் வண்ணக் கோலமிட
மெல்ல மெல்ல வாவிக்குள் மூழ்கும் செம்பந்து-வாவியில்
முகம் பார்த்து, வானில் விளையாடும் நிலாப்பந்து.

அந்தியில் அல்லிகள் பொய்கைகளில் பூத்தாட
வௌவால்கள் பழமரங்களை மொய்த்துக் கூத்தாட
ஆந்தைகளும், கூகைகளும் அகவிப் பறந்திட
பன்றி வருகுது ஓட்டி நில் எனக் கூவி பறக்கும்-
ஆட்காட்டிப்பறவைகள்

வருடம் முழுவதும் கோயில் திருவிழாக்கள்-பெருவிழாவாய்
மாமாங்க பிள்ளையார் கோயில் திருவிழா
தீர்த்தம் ஆடி விழா முடியும் வரை
இரவும் பகலும் ஓடிக் களிக்கும் பஸ்வண்டிகள்

வெசாக் பௌர்ணமியில், வீதி களை கட்ட
பல கடைகள்., புத்தர் பெருமானை வழிபட்டு
வாழ்த்துக்கள் பரிமாறும் சம்பிரதாயங்கள்

பாஸ்கா திருக்காட்சியும்
புனித அந்தோனியார் திருவிழாவும் களைகட்ட
அலைமோதும் மதம் கடந்த பக்தர்கள்

கன்னியர் விழிக்குளத்தில் காளையர் காதல் தீர்த்தமாடிக் களிக்க
காளையர் மனதில் கயல்விழிகள் ஆனந்த நர்த்தனமாடித் தவிக்க
தீர்த்த கரையினில், தீர்த்தம் ஆடியவனை மொய்க்கும் பூ விழிகள
கன்னச் சிவப்பும், கள்ளச் சிரிப்பும் காதல் சொல்ல
மலரும் காதல் தீர்த்ததோற்சவங்கள்

ஊர் வலமாய் செல்லும் காவடி ஊர்வலத்தில்
யாரும் காணாமல் -ஊருக்கும் தெரியாமல்-கன்னியரை
கண்களால் காதல் காவடி எடுக்கும் காளையர்

அம்மன் கோயில் தீ மிதிப்பில்
காளையர் நெஞ்சங்களில்-கண்களால்
காதல் தீ மூட்டும் கன்னியர்,
காதல் தீ மிதித்தே கன்னியர் நெஞ்சை
கொள்ளையடிக்கும் காளையர்

முத்துப்பல் ஒளிரக் கள்ளச் சிரிப்போடு-காதலுக்கு
ஒப்புதல் வழங்கிடும் கன்னியர்
அண்ணலும் நோக்கிட அவளும் நோக்கிட
மலரும், மதுவண்டமாய் விழிகள் தழுவி மகிழ்ந்திட
நெஞ்சிலோ பொங்கிப் பெருகும் காதல் உவகையோ வைகை

பூ கொய்யும் சாக்கில்-பூக்காரி
பூ விழிகளால் காளை நெஞ்சை பூவாய் கொய்தே
பூச்சூடும் அழகாய், அழகனை நெஞ்சில் சூட
காதல் வானில் பறக்கும்
காளை மனமோ வண்ணக் காற்றாடி

கொய்யா கொய்யும் சாக்கில்-கொய்யாத கன்னி,
காதல் கிளி கொத்தாத கனி அத்தை மகளைக்
கண்களால் கொய்யும்-காளை
கொட்டு மேளம் கொட்டித்-தாலி கட்டிட
கன்னியோ, நாளும் கொத்தி சுவைக்கும் காதல் கனி

கண்பட்ட சுகமும்-கன்னியர் அழகும் காளையருக்கு
காதல் சுரம் தந்திட, கவிபாடும் காளையர் கூட்டம்
பூங்குழலாட-பூவிழிகள் காளையரை மேய
கோயில் செல்லும் கன்னியர் கூட்டம்.

ஆடிக் காற்றிலே பட்டம் விட்டு-பாவையர் நெஞ்சை
ஆட்டிப் பார்க்கும் காளையர் கூட்டம்-காளையர் நெஞ்சிலே
கண்களால் காதல் தூது விட்டு-நெஞ்சை
ஆட்டுவிக்கும் கன்னியர் கூட்டம்.

வெண்ணெய் கடையும் கன்னியர், கடைக் கண்ணால்
மாமன் மகன் நெஞ்சை கடைய-நெய்யாய் உருகி
கண் வழியே வழியும் காதல்

புல்லாங்குழல் இசைக்க- பல்லாங்குழியாடும் பாவையர்
காளையர் இதயத்தில் -காதல் பல்லாங்குழியாட
கண்ணால் காளையர் நெஞ்சில் காதலை விதைக்கும் கன்னியர்-

கூடையும், பாயும் பின்னும் கன்னியர்
கடைக்கண்ணால் காளையர் நெஞ்சங்களில்
காதல் வலை பின்ன-வலைபட்ட கயலாய்
கன்னியர் விழிபட்டு துடிக்கும் காளையர்

தாவணிபோட்ட பச்சைகிளி-முந்திரி தோப்பில்
ஆலோலம் பாடி -கிளி துரத்த, அக்காள் மகள்
காதல் கிளியை, ஆசை தீர கண்களால் கொத்தி
காதல் மொழி பேசும் அத்தான் விழிகள்

அவல் குத்தும் அழகு மங்கையர், அம்மான் மகன்
நெஞ்சை கண்களால் குத்த கயல் விழிகளில் பொங்கும் காதல்
கள்ளச் சிரிப்பினில்-புது வெள்ளமாய் ஓடிட
காதல் நதியில் மூழ்கிடும் காளை

மாந்தோப்பில் முற்றி நிறத்த செம்மாங்கனி
காதல் கிளி கொத்தாத தேன்கனி
கள்ளப் பார்வையால் காளையை கொத்தி
காதல் சொல்லும் பச்சைக்கிளி

வலைவீசும் மீனவனுக்கு -கண்ணால்
காதல் வலைவீசும் மீனலோசனி
தூண்டில் போடும் காளைக்கு
கண்ணால் தூண்டில் போடும் கயல்விழி

கதிர் அறுக்கையில்-குலுங்கிடும் முந்தானை
காளையர் நெஞ்சங்களை குலுங்கிட,
கதிரோடும், கள்ளவிழிச் சிரிப்போடும்
காளையர் நெஞ்சத்தையும் அறுத்து சேர்க்கும்
காதல் கன்னியர் விழிகளும் அரிவாளோ?

அறுத்த கதிர் குதிரில் சேர, வளர்த்த காதல்
நெஞ்சுக்குள் பூக்க, வேல் விழிகளால் காளையர்
நெஞ்சைத்தை கொள்ளையிடும் காதல் திருடிகள்.

எங்கும் காதல் பொங்க
இளமை பொங்கித் ததும்ப-கயலாய்
நெஞ்சுக்குள் துள்ளும் காதல் இதயம்

காதல் தேசமிது , காடும் கழனியும், காதல் பாட
கலையும்-தமிழும் வாழும் நம் ஊரிது.

வெள்ளை நிற மல்லிகையோ பாடி-
தமிழ் அன்னைக்கு யாழ் நூலை மாலையாய்ச் சூடி
ஊற்றுப்பூங்காவில் நிமிர்ந்து நிற்கும் விபுலானந்த அடிகள்

அறிவாலயமாய் புனித மிக்கேல் கல்லூரியை எழுப்பி
கல்லூரி வாயிலில் மாணவரை வரவேற்கும்
அருட் தந்தை பொனல் அடிகள்

மத்திய கல்லூரி, வின்சென்ட் மகளீர்க் கல்லூரி எழுப்பி
விளக்கோடு வழிகாட்டும் வில்லியம் ஓல்ட் அடிகளோ
புளியன் தீவின் வாயிலில் வரவேற்க, வள்ளுவனும், பரதியும்
ஒளவையும், நெடுஞ்சாலையோரங்களில், தமிழின் பெருமை பாட
பெரியாரை போற்றும் பூமியிது

விளையாட்டுக்கு அரும் பணியாற்றிய
வெள்ளைப் பெருமான் பெயர் சொல்லும் வெபர் அரங்கம்
சிறுவருக்கு கதையரங்கம் நடத்திய மாஸ்டர் சிவலிங்கம்.

எழுவான் கரையில் முகம் காட்டும் இளம் கதிரவனை வரவேற்க
எழில் காட்டும் கன்னிப் பூக்கள், மது வண்டும், தேனியும் இசைபாட
புள்ளினங்கள் பூபாளமிசைக்க, பொன்னொளியில் வாவியும்
பொன்னாய் மின்னிடக், கண் பார்த்து களிக்க-வானில் கதை பேசி
களித்தே பழந்தேடிப் பறந்து செல்லும் கிளிக்கூட்டம்.

அந்தி மாலையில் , நிரைகள் மணியொலித்து வீடு திரும்ப
புள்ளினங்கள் இசைக்கோலமிட்டு கூடு திரும்ப-செவ்வானில்
சிவந்த சூரியனும் பிரிய மனமின்றி பிரிய
ஒளி முகம் காட்டி தாரகைகள் பூத்த வான் தரையில்-
தனியே உலாவரும் வெண்ணிலா-காளையர் மனதில்
கனவிலும் உலாவிடும் காதல் பெண்ணிலா

அலையாடும் நீலக்கடலுக்கு-பொன் மணற் கம்பளம்
கடலோடும் வாவிக் கரைக்கு- பச்சைப் புற்கம்பளம்
தென்னையும், புன்னையும் கொடி பிடிக்க, வாகை நிழற் குடை பிடிக்க
தெம்மாங்கும், ஏலேலோவும் இன்னிசையாய் ஒலிக்க
பாடும் மீன் பாட-வாவியிலே வெண்நாரைகளும், மீன் கொத்திகளும்
கடற் காகங்களும் மீன் பிடிக்கத், தோணியில் வலை வீசும் மீனவர்.

முப்பது வருடமாய்த் தொடர்ந்த ஆயுதப் போராட்டம்
ஊரையும், உறவையும் சிதைக்க, மண்ணிலே குருதிக்கறை
மனங்களிலே உறவைப் பிரிந்த கண்ணீர்கறை
இன உறவும் சீரழிய-இடம் பெயர்ந்த மக்கள்
புகலிடம் தேடி உலகெங்கும் ஓடிய தமிழ் அகதிகள்

நெல் விளைந்த பூமியில் -உயிர் விதைத்து அழுதார்-
புல் வளர்ந்த காடாய்போன ஊரை கண்டு
உறவுகள் நெஞ்சம் கலங்கி நின்றார்
ஓடித் தப்பியவர் போக-ஓட முடியாத ஏழைகள்
வாழ்வே போராட்டமாக வாடி நின்றார்.

விளை நிலங்களில் வித்துடல்களை விதைத்து
-அலையாடும் பொன் மணற்கரைகளில்
அலை ஒதுக்கும் பிணங்களைப் புதைத்து
வெந்த உணர்வுகளில் குருதி வடிய
புலம்பி அழுதிடும் உறவுகள்ஆயிரம்.

வீடு, காடு, கழனி, கோயில் அழித்து, உறவுகளை உயிரோடு கொளுத்தி
இராணுவத்தின் வெறியாட்டங்கள்-நாறி மணந்து, வாவியில் மிதந்து
கடல் நோக்கி பிணங்களின் பயணங்கள்
கூட்டமாயக் கரையும் காகங்கள், முகாரி பாடும் மீன்கள்

வட்டக்களரியில் ஆடிய பாதங்கள் இரத்தக்களிரியில் வீழ்ந்திட
ஒலித்த சலங்கைகளும், ஓங்கிய வெண்குரலும் ஓய்ந்து மௌனத்தில் மூழ்கிட
ஆடியபாதங்களை தேடிய பாவையும் பூவும், பொட்டுமிழந்து வாடித்தவித்திட
இரத்தக்கறை படிந்த சலங்கை, கண்ணீர் கறைபடிந்த மங்கை

அவல் குற்றிய கன்னியும் அவலமாய் சிதைய
கறையான் அரிக்கும் உரல் உலக்கைகள்-ஆலோலம்
பாடிய தாவணிக்கிளியை, வல்லூறு அள்ளிச் செல்ல-
ஓலமிட்டு அழும் இறகொடிந்த காதல் கிளி

வெண்ணெய் கடைந்த கைகளில் வளையல்கள் இல்லை
வாழ்விழந்த விதவையை நாளும் சோகம் கடைய
பொங்கி ஓடும் நெய்யாய்க் கண்ணீர்

பூக்கொய்த விழிகளை சோகம் கொய்ய
கண்களில் பாயும் கங்கைகள்
பாயும், கூடையும் பின்னிய வாழ்வை,
சோகம் பின்னிட-விதவையான பூவை

வல்லாங்கிற்கு பலியான- முந்திரித் தோப்பு சுந்தரி
வௌவால் கொறித்த கனியாய் புழுதியில் கிடந்திட
மனசுடைந்து தூக்கில் தொங்கிய காளை
பாழ்பட்டுபோன தோப்பில்-பிணங்கொத்தி கழுகுகள் குவிந்திட
அஞ்சி திசை மாறிப் பறந்த பச்சைக்கிளிகள்

மயிலாடும் மாந்தோப்பில் ஒயிலாடும் உறவாய் நின்ற மச்சினி
ஆலோலம் பாடிய குயிலினி, குண்டுபட்டு வீழ்ந்த
மாமனை கண்டு, நெஞ்சு வெடிக்க அலறி அழ-முந்திரியில்
சோகம் செப்பும் கிளிக்கூட்டம்

பஞ்சும், நெருப்பும் அருகருகே இருந்திட
பற்றிய காதல் நெருப்பு-இன்றோ
பஞ்சும் எரிந்து மறைந்திட-நெஞ்சில்
பற்றிய எரியும் அணையாத சோக நெருப்பு

கதிர் அறுத்த கன்னியை, குதிருக்குள் சிதைத்துக்-
உயிரோடு, குதிரோடு தீக்கிரையாக்கிய அரக்கர்
கரியாய் மாறிய காதலி உடல் கண்டு-தீக்குளித்துக்
கருகும் காதலன் இதயம், தீ அணைந்தும்,
தனலாய் நெஞ்சை எரிக்கும் ஆறாத சோகம்

வலையோடு வந்தவன் ஈரல் குலை அறுபடச் சுட்டார்
தூண்டில் போட்டவனை அடித்தே கொன்றார்-வடியும் குருதி
வாவியில் கலக்க, ஆளில்லாத் தோணி அல்லாட-
இராணுவத்தின் வெறியாட்டங்கள்-
விடுதலைப் போராட்டங்கள்

ஆவி போன உடலை ஆரத் தழுவி-மண்ணில்
விழுந்த கயல் மீன்களாய்த் துடிக்கும் பெண்மை
உறவுகளின் ஒப்பாரி எட்டாத உயரத்தில் இறைமேன்மை?

பொல்லார் கண்பட்டுக் காதலும் சாதலில் முடிந்திட
புண்ணான நெஞ்சுக்குள் ஆறாத ரணங்கள்
பொன்னான நினைவுகளை, சோகக் கறையான்கள் அரித்திட
நடைப்பிணமாய் வாழும் கன்னி மனங்கள்

கண்ணீர்க் காவியமாய் மாறிட்ட மண வாழ்வில்
பல்லாயிரம் இளம் விதவைகள், குண்டடிபட்டு வீழ்ந்த அண்ணன்
கொடியவரிடம் சிறைபட்டு உயிரிழந்த தம்பி

தாய் மனம் சிலுவை சுமக்க-உறவுகளோ
சிலுவை அடியில் அழுது புலம்ப
வாழ்வே சிலுவை எனச் சொல்லாமல் சொல்லிட
வானில் சிலுவை குறிபோட்டு பறக்கும் நாரைகள்

பால். முட்டை அப்பங்கள் உண்டு பசியாறி
பிட்டும் தயிரும் பழங்கறியும் அமுதாய் பரிமாற
சுடுசோறும், மீன் பொரியலும், இறால் சொதியும் வாயுற
கைகுத்தரிசியும், மீனிட்டு கடைந்த, கீரை, குறிஞ்சா, திராய்,
கொடுவாய் மீன் சினையும், சினை நண்டும்
காட்டுப் பன்றி கறியும், வயிற்றில் அலைமோத
அம்மாவின் ஞாபகங்கள்-யுத்தம் பலி கொண்ட
அண்ணனும், தம்பியும்-இதயத்தில்
இன்றும் ஆறாத காயங்கள்-தீராத சோகங்கள்

இது என் மண்-எம் முன்னோரும், மூத்த குடியும்
வாழ்ந்திட்ட செம்மண்- இதில் கலந்திட்ட-எம்மவரின்
வியர்வையும், குருதியும் இன்றும் எமதென்று சொல்ல
வாங்கொலியும், பிரித் ஓசையும், நாமாவாளியும்,
செபமாலையும், நம்மிறைவனை பாடித் துதிக்க,
வேர் ஊன்றி, விழுது விட்டு, அரசாய் விரிந்து
நிழல் ஈந்த மண்,
அழுது புலம்பிட நெஞ்சு வலிக்குது.

அலைமோதிக் கடலும் விளையாட, வாவி மௌனத்தில் கடலோட
தெம்மாங்கு பாடி வயலுக்கு நீரோட-ஏலோலம் பாடி-
கரை வலை கரையேற, ஆலோலம் பாடி பச்சை கிளி விரட்டிய
எம் இனம்.-எழுவான் கதிர் கண்டு பூபாளம் பாடும் புள்ளினம்.
முகாரி பாடும் நிலைக்கானதே!

பல வண்ணப் பூக்கள் மலர்ந்த நந்தவனம்
பாலும் தேனும் ஓடும் பிருந்தாவனம்
கயல் விழி கன்னியர் கண்டு நெஞ்சம் காதல் கொள்ள-
பரவசமூட்டும் காதல் தேசம்-பாழாய்ப்போன யுத்தத்தால்
பாழடைந்து -துயரம் உலாவிடும் கண்ணீர்க் காடானதே

போரும் ஓய-பிணவாடையும் ஓய, துப்பாக்கி மனிதரும் சாய-
புனர் வாழ்வு காணாத ஏழைக் கிராமங்கள்
தளிர் நடை போடும் அகதிகள் மௌனமாய் ஓடும் வாவி-
மண்ணோ ஆவி போன கூடாய் மாறிட்ட சாமி.

பாட்டி கதைகேட்டு பரவசமாகும் பேரக்குழந்தைகள்
யுத்தத்தால் புதைகுழிகளாய் மாறிட-பல்லிளந்து,
சொல்லிழந்து பார்வை மங்கிய மூதாட்டி
தன் பேரக்குழந்தைகளைத் தேடி பரிதாபமாய் புலம்பிட
வண்ண நிலவும் அழ-வானிலே இன்று அமாவாசை-
பூவும் பொட்டுமிழந்த இளம் விதவையர் வாழ்வோ
என்றும் அமாவாசை.

பாலூட்டி வளர்த்த கிளிகளை
காட்டுப் பூனைகள் வேட்டையாடின
நீருற்றி வளர்த்த பயிர்களை
காட்டு யானைகள் அழித்துப்போட்டன

காடாய்போன ஊர்களில் பேய்கள் குடியிருக்க
கண்ணீரில் மூழ்கிடும் உறவுகள்
ஆடிய பாதங்களும் ஓய்ந்திட-அறுந்த சலங்கைகள்
அறுந்த தாலிகளும் தூக்கு கயிறாய் மாறிட
வாழ்விழந்த மங்கையர்-தங்கையர்.

வட்டக் களரியிலும், வாவிக் கரையிலும் குருதிக்கறை,
வண்ண விழிகளிலோ கண்ணீர்க் கறை
ஆடிய கூத்தும் ஓய்ந்திட-அறுந்த சலங்கை
வாவியும் வாடிப் பொலிவிழக்க, யுத்தம் தீய்த்த இலங்கை

ஓ என் நாடே-தாய்த் திரு நாடே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-23-06-2023

முள் வனத்து மொட்டுக்கள்

புத்தம் புது மலர்களை வன்புணர்வு செய்யும்
காமப்பேய்கள், வாசம் வீசும் வண்ண மொட்டுக்களை
நாசம் செய்யும் கொடிய ஓநாய்கள்

அம்மணமாய்க் கிடக்கையில்- அநாதரவான விழிகள்
அண்ணாந்து முகட்டை வெறிக்கும்.
உடலைச் சுற்றும் மலைப்பாம்பு இறுகத் தழுவுகையில்
இரகசியமாய் விழி சிந்தும் ஈரம் தலையணையை நனைக்கும்
புதுமலரை காமப்புழு அரிக்க, வெந்தணலில் வீழ்ந்த பொன்மீனாய்
பூ மனம் துடிக்க, விடியல் இல்லாத வாழ்வு எரிநரகான உலகு

பசும் புல்வெளியை படர்ந்து மூடி, பாய்ந்து மேய்ந்து
காமக் காளை பசி தணிக்க, மடந்தையின் இதயம் அம்பு பட்ட
மாடப்புறவாய்த் துடிக்க-கசியும், சூடான கண்ணீர் கடவுளைச் சுடும்.
உள்ளத்தின் கதறல் ஊமையின் குரலாய் மௌனித்துப்போகும்

சுக்கிலத்தில் நீராடும் மேனி, அமிலத்தில் விழுந்த புழுவாய்த் துடிக்க
சின்னப்புறா பட்ட வலி-சிலுவையில் இயேசு அனுபவிக்காத கொடிய வலி
பாஞ்சாலியும், சீதையும் அறியாத காமவெறி, தகனப்பலி

இது பூவுக்கும் மதுவண்டுக்கும் இடையே நடக்கும் அழகிய உறவல்ல
பூப்படையாத சிறுமிக்கு நிகழும் வன்புணர்வு
எரி நரகில் வேகும் தேகம், எழில் குன்றிக் கருகும்,
நாளும் வளரும் சோகம் இதயத்தை கூர் வாளாய் வருத்தும்
காமக் காளைகளின் மேய்சலில் பூமனம் பட்டுப்போகும்

“கெட்டுப்போனோம் பாவியானோம்
கிருபை செய் நாதனே” மனம் துக்கித்துப் பாட
“சிலுவைப் பாதை” அரங்கேறும்

நெய் வளர்த்த தீயில்-சீதை நீராடியதோ ஒரு முறை-
பொய் வளர்த்த காமத் தீயில்
பூஞ்சிட்டுக்கள் நீராடுவதோ பலமுறை

கட்டிக் கரும்பை காமப் பேய்கள் சுவைத்து சக்கையாய்த் துப்பிட
கலங்கிடும் நெஞ்சம் ஒதுங்கிடக் கரை தேடும்-கரையோ
அடிவானம் கடந்து-ஆண்டவனும்
அறியாத் தொலைத் தூரமாய்த் தோன்றும்

பஞ்சணையும், பாவையர் சுகமும் காமுகருக்கு விருந்து
காலத்தால் ஆறாத ரணத்திற்கு ஏது மருந்து?
பூபாளம் பாடிய புள்ளிக்குயில்கள் கேவிக் கரைய
வண்ணக் கனவுகள் கலைந்தே அழிய
பூவான இதயத்தை தீய்க்கும் எரி நரகான இரவுகள்

எட்டிப் பார்க்க இயலாது விழிகளுக்குள் உறைந்த கண்ணீர்
சொல்லியழ முடியாது-இதயத்தின் மொழிகளுக்குள் மறைந்த சோகம்
வன்புணர்வால் நரகான வாழ்வு, எட்டாத உயரத்தில் கிட்டாத சாவு

பொன்னான உயிரும், பூவான மெய்யும் சீரழிய
புழுதியில் விழுந்த பூமாலையான வாழ்வு
கண்ணீரில் கரையாத சோகமும்-காலத்தே மரத்து
கல்லான இதயமும் மெய்யாக
காமுகனுக்கு சிறுமியும் விளையாட்டுப் பொம்மை
கடவுளோ, சிறுமிக்கு கற்சிலையான உண்மை

உழுது விதைக்க ஒரு காலம், அறுத்துச் சேர்க்க ஒரு காலம்
கடத்தப்படும் சிறுமியரைக் காக்க கடவுளுமில்லை
விறைத்த குறிகள் சிதைத்திட நேர காலமில்லை
சட்டமும், பணத்திற்கு சோரம்போன அவல நிலை?

வண்ண பூக்களும் வாடிச் சோபை இழக்க
மலரான இதயமும் முள்ளாய் மாறி வாசமிழக்க
பொய்யான உலகில் வாழும் வாழ்வோ நடிப்பாகும்
மெய்யோ நாளும் விலைபோகும்

வாடி வனப்பிழந்து, வாழ்வின் துடிப்பிழந்து
காமத் தீயில் நாளும் கருகிடும் வாழ்வில்-காதல்
சிறுமி அறியாத உறவு-வன்புணர்வோ
நாளும் அரங்கேறும் நிகழ்வு.

கழிந்துபோன வசந்தங்களை நினைந்து குளிக்கும் போது
குமுறி அழும் நெஞ்சம் கனவாய் போன உறவுகளை எண்ணி
கண்ணீரில் நனையும் மஞ்சம்.

ஈரவிழியும், இறுகிய உள்ளமும் மறைத்தே, துச்சாதனனுக்கும்
துகில் களையும் பாஞ்சாலியாய் இவள் நடிப்பு
இராவணனிற்கும், முந்தானை விரிக்க
சோகவனச் சீதையின் புதிய சிறையிருப்பு
இந்திரனுக்கும் இவளோ இன்னோர் அகலிகை
சந்திரனுக்கு இவளும் குரு பத்தினி

மறைக்க ஏதுமின்றி உணர்வு மரத்த உடல்,
கசப்பை சுவைத்து கல்லான இதயம்
செழித்த அழகு காட்ட-சின்னப் பூவிற்கு ஏவாளின் நிலை
விறைத்த குறி மறைக்க-இறைவனுக்கு ஏது இரும்புக் கச்சை

கொட்டு மேளம் கொட்டத், தாலி கட்டி, தாரமாய் மலரும் உறவு,
சாந்தி முகூர்த்தத்தில் கூடும் தாம்பத்திய உறவு
பொய்யாய் கனவாய் போயிட, சாந்தியுமின்றி,
முகூர்த்த நேரமுமின்றி, நடந்தேறும் வன்புணர்வு

பாவையர் சுகமும், பஞ்சணையும் ஆண்களுக்கு
பாவச் சுமையும், -விபச்சாரிப் பட்டமும் அபலைகளுக்கு

அழகு மலர்ந்து பூரித்த மெய்யும், அன்பு துளிர்த்து துடித்த இதயமும்
காமப்பேய்களுக்கு விருந்தாகிட, பெதும்மையின் வேதனையை
மதலேன் மரியாளும் அறிவாளா? சிறுமிகளின் சிலுவையை
இறைமகனும் சுமப்பாரோ? இன்னோர் அவதாரம் எடுப்பாரோ?

போராடித் தோற்று, பறிபோன கற்பு , மனதைச் சிதைத்து,
மானத்தைப் பறிக்க, மனமோ சாரமிழந்த உப்பு,
வாழ்வோ மாயையான கசப்பு.

பெற்ற வயிறுகளும் தீப்பிடித்து எரிய
பிள்ளைச் செல்வங்களோ காமத்தீயில் கருக
ஏற்றி வைத்த மெழுவர்த்தி உருகி எரிய
சோகத் தீயில் கருகும் உணர்வுகள்

பெதும்பை, மங்கை, மடந்தையர்-வஞ்சகரால், நயவஞ்சகமாய்
கடத்தப்பட்டு பஞ்சணைப் பாவையராய் இலட்சங்களுக்கு விலைபோக
கன்னியர் கடத்தலும்- பாலியல் வியாபாரமும் கோடிகளைத் தாண்டி
கேடிகளுக்கு செழிக்கும் வியாபாரமானது-சிறுமிகளின் வேதனை
கல்வாரியில் இயேசுவும் படாத சோதனையானது

இரும்புக் கூண்டுக்குள் வானம் காணாத
பூபாளம் அறியாத புள்ளிக் குயில்கள் முகாரி பாட
மீன் தொட்டிக்குள் கடலை அறியாத பொன் மீன்கள்
நீந்திக் சோர, நாளும் எரி நரகான வாழ்வு ஏனோ இறைவா?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-23-06-2023

மும்தாஜ் மஹால்

இதயங்களின் இன்பச் சங்கமம் காதல்
இருமனங்களின் கூட்டு ஒப்பந்தம் திருமணம்
வாக்குறுதிகளோ வாய்மொழி
வள்ளுவனுக்கே இல்லறம்- ஸ்ரீராமனை சீதை
துறந்தது விவாகரத்தான நல்லறம்

வற்றாத ஜீவநதியாய்ப் பொங்கிப் பிரவாகிப்பது காதல்
தேங்கி நாறுவதோ குட்டை? மனமுடைந்து
ஒப்பந்தங்கள் இரத்தாக விவாகரத்தாகும் மணவாழ்வு
ஒப்பந்த வாழ்வில் பல நூறு நிர்ப்பந்தங்கள்
ஓடாத நதியில் ஓயாது படியும் சேறு சகதிகள்

என் சதையின் சதையானவள், என் என்பின் என்பானவள்
ஏவாளைக் கண்டு, தனிமையில் தவித்த ஆதாம்
பாடிய உலகின் முதல் காதல் கீதம்.

அறிவுக்கனி உண்டு ஆணவம் தோன்றிட
இருமையால் பிளவுபட்டவன் இறைவனின் கேள்விக்கு
என்னுடன் இருக்கும்படி நீர் தந்த பெண்ணே
கனியை உண்ணத் தந்தாள் , நான், அவள் எனப்
பிளவுண்ட மனங்களில் காதல் இல்லை-
நான் அல்ல நீயே என்பதே காதல்.

கண்ணகி -மாதவி வாழ்விலும் கலைந்த காதல்,
நிலைத்த கண்ணீர்-விதவை மதுரைக்கு
மூட்டியததோ விபரீத நெருப்பு

வாரிசுக்காய் மன்னர்கள் பலதாரம் முடிப்பது அரச சம்பிரதாயம்
பன்னிரு பெண்களை மணம் முடித்த முகலாயப் பேரரசன் ஷாஜகான்
இதயத்தை துடிக்க வைத்த இன்பக் காதலி மும்தாஜ் ஒருத்தியே

நவரெத்தினச் சந்தையில் கண்ட அரிய இரத்தினம்
பதினான்கு வயது பருவக்குமரி மும்தாஜ்
பதினேழு வயதுக் காளை ஷாஜகான்

ஆறு வருடம் காத்திருந்து, ஆறாக் காதலோடு முடித்த திருமணம்,
மரணம் தாண்டியும் வாழும் காதலைப் பறைசாற்றிடும்
தாஜ்மஹால், அழியாக் காதலின் அற்புதச் சின்னம்

பஞ்சணையிலும் அஞ்சுகம், கணவனைப் பிரியவில்லை
மரண ஓலம் கேட்கும் வெஞ்சமர்க் களத்திலும்
காதலனை பிரியவில்லை காதலி மும்தாஜ்.

இருபத்தி மூன்று வருட காதல் வாழ்வில்
பதினான்கு குழந்தைகளை ஈன்றெடுத்த தாய்
குழந்தை பிறந்திட, குருதிப் பெருக்கு தொடர்ந்திட
கண்ணீரில் மூழ்கிட்ட ஷாஜகான்
கண்களை மூடிட்ட காதலி மும்தாஜ்

காதல்-காதல்-காதல்
காதல் இன்றேல் சாதல் என்றே
அவளின் வாழ்வு

உயிரின் ஒரு பாதி உறங்கிட, உயிரின் மறுபாதி
அமைத்த காதல் மாளிகை தாஜ்மஹால்,
இது வெறும் பளிங்குக் கட்டமல்ல
இதயங்களின் சங்கமம்

ஓதும், ஒன்று கழிந்த நூறு வல்ல அல்லாவின் திருநாமங்கள்
ஒளிர்ந்திடக், காதலன் ஷாஜகான் கட்டிய காதல் கோயில்-
இது கல்லறையல்ல-இங்கே உறங்குவதும் உடல்கள் அல்ல
உடல் பிரிந்தும் உயிரால் இணைந்த காதலர்கள்.

ஐவரை மணந்த பாஞ்சாலி அறியாத காதல்
ஒருவனை மணந்த ஜானகி சுவைக்காத காதல்
சுவைத்தவர் ஷாஜகான் மும்தாஜ் ஜோடியே

உடல்கள் அழியும் உலகில்-அழியாத காதல்
உடல் தாண்டிய உறவென்று முழங்கிடும்
பளிங்கு மாளிகை-தாஜ் மஹால்.

காதலாகி மலர்ந்து-கல்யாணத்தின் பின்
காகிதப் பூவாகி வாழும் தம்பதிகளுக்கிடையே
என்றும் காதலராய் வாழ்ந்த கணவன் மனைவி
ஷாஜகான்-மும்தாஜ் ஜோடி ஒன்றே!

அழிவற்ற காதலுக்கு உலகில் -
ஒரே ஒரு சாட்சியமாய் தாஜ்மஹால் ஒன்றே
காலமெல்லாம் நிலைத்துக், காதலுக்கு சாட்சியம் பகிர
காதலே வாழ்வு என்று கட்டியம் கூறும்
காதலின் சின்னம் உலகில் தாஜ்மஹால் மட்டுமே

அன்பினால் துன்புறும் வரை, உண்மை அன்பை
உணர்ந்து கொள்ள முடியாது, கண்பார்த்து நெஞ்செழுதிய
காதலும் கரைந்திட, கர்ப்பிணி ஜானகி கானகத்தில் அழுதாள்?,
மண்பார்த்து நாணிய மங்கையும் மணவாழ்வு மணமிழந்து நாறிட-
கணவன் ஶ்ரீராமனை வேண்டாம் என விட்டுப் பிரிந்தாள்

மலரும் மணமுமாய், கனியும் சுவையுமாய்
பாலில் கலந்த தேனாய்-இதயம் தொட்ட காதலராய்
வாழ்ந்தவர் ஷாஜகான் மும்தாஜ் மட்டுமே

காதலாகி மலர்ந்த இதயங்கள்
கல்யாணத்தின் பின் வாடும் என்றோ
ஒரு மாலைக்குள் வாடும் பூமாலைகளை
மாற்றிக் கொள்கின்றார் மணமக்கள்?

காதலர் அழிந்தாலும்-தோற்றாலும்
காதல் அழிவதில்லை
காதலுக்கு தோல்வியுமில்லை
தோற்பது காதலுமில்லை


இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-23-06-2023

முறிந்த தோரணம்

மாங்கல்யம் தந்துனானே-மமஜீவன ஹேதுநா
கண்டே பத்நாமி ஸுபகே-த்வம் ஜீவ சரதஸ்சதம்”

மங்கலமான பெண்ணே-உன்னோடு, இன்று நான் ஆரம்பிக்கும்
இல்வாழ்வு நல்ல முறையில் இருக்கவேண்டும் என்று உறுதியளித்து
இந்தத் திருமாங்கல்யத்தை உன் கழுத்தில் அணிவிக்கின்றேன்
என் இல்லத் துணைவியாக, என் சுக துக்கங்களில் பங்கேற்று
நிறைந்த யோகத்துடன் நீ நூறாண்டு காலம் வாழ்வாயாக

வாழை, மாவிலைத் தோரணங்கள் நல்வரவு கூறிட
மேள தாளங்கள் முழங்கி நாதஸ்வரம் வரவேற்றிட
ஹோமம் வளர்த்து மந்திரம் முழங்க-சொந்தமும், சுற்றமும்,
அட்சதை போட்டு வாழ்த்திடக் கட்டிய மங்கலத்தாலி
காலத்தே கயிறாய்ப் போனது, அம்மி மிதித்து,
அருந்ததி பார்த்துப் புரிந்த திருமணம் விவாகரத்தானது



சீதேவியாய் வந்தவள் மூதேவியாய்ப் போனாள்
மருமகனாய் வந்தவன்-தெருநாயாய் ஆனான்-
மணவாழ்வு பொய்யாக, மனம் புண்ணாகப் பிரிந்து வாழ
பறந்து போன முன்னாள் காதல் கிளிகள்

ஆயிரங்காலத்துப் பயிர், வெறும் சேனைப்பயிராக
மஞ்சத்தில்-சாந்தி மூகூர்த்தத்தில்-மனைவி
உதரத்தில் கட்டிய தொட்டில்
தொப்பிள் கயிற்றோடு அறுந்துபோனது.

மலிந்திடும் மனமுறிவுகளால், தொடர்ந்திடும் மணமுறிவுகள்
கூடு கலைந்திட-அன்பைத் தேடி அலையும் குஞ்சுகள்.
பன்னீர் தெளித்து, -அட்சதை தூவித் தொடங்கிய வாழ்வில்-
அவலமாய் அமில மழைத் தூறல்கள்

பூவாய் மலர்ந்து கனி தரித்த பூங்கொடிக்கு -கொழுகொம்பும்
கழுமரமானது-நாளும் வெந்நீர் தொட்டிக்குள்
கண்ணீர் சிந்தும் கயல்கள்-விடுதலைக்காய்
நாட்களை எண்ணும் ஆயுட் கைதிகளாய் மணமக்கள்?

வாழையடி வாழையாய் வாழ வேண்டிய உறவு-குடும்பப் புயலில் முறிந்த
குலைபோட்ட வாழைகளாயின, விளக்கின்றி வீடும் இருளாக -தலைவனின்றிக்
குடும்பப் புயலில் அல்லாடும் காதல் கொடி பறந்த கப்பல்

தாழம்பூவிற்குள் பூநாகம் குடியேறப்- பூவிற்குள்
பூகம்பம் கண்விழிக்க, கலைந்த காதலோ அலங்கோலம்?
ஆயிரம் காலத்துப் பயிரில் அறக்கொட்டி வீழ்ந்த அவலம்

கண்ட கனவும் கலைந்து பொய்யாகிட, கண் அவனும்,
கணவனில்லை என்றாகிட, தாரமும், பாரமாகி,
இல்லாளும் இல்லையென்றாகிட, சூடிய மலரோ புழுதியில்
குழந்தைகளின் வாழ்வோ கேள்வியில்
அறம் துறந்து-பொருளிழந்து, திரிந்து போன காமத்துப்பால்
வீடோ சுடுகாடு-காடோ இனிப் போகும் வீடு

இல்லறமும் பொய்த்திட, இல்லறமே நல்லறம் சொல்லிட?
வாசுகி, வள்ளுவன்னில்லை, பெற்ற குழந்தைகளும் பிரிந்திட
காதலாகிச் சூடிய பூவும் வாடி உதிர்ந்திட
மாதவி, கோவலனாய் மாறிடும் உறவுகள்?

அன்பு, புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுப்பு, பகிர்ந்து வாழ்தல்
மன்னிப்பு, ஸ்நேகம், காதல் எல்லாம் காலாவாதியாகும் என்றே
ஒப்பந்தமாய் மாறிட்ட திருமணங்கள் இன்று-மணவாழ்விலும்
காலாவாதியாகும் தேதி மறக்காமல் குறிப்பிட்டால்
வாழுமோ காதல் உலகில் இன்று?

இன்பத்திலும், துன்பத்திலும், நோயிலும், நலத்திலும்
இணைபிரியாது வாழ்வோம் என்ற வாக்குறுதியும்
காற்றில் எழுதிய எழுத்தாய், நீரில் போட்ட கோலமானது.
மாலை சூடி அம்மி மிதித்து, அக்கினி வலம் வந்து
அருந்ததி பார்த்த மணநாள் நேற்றையப் பொழுதானது

சோக அம்மியை நெஞ்சில் சுமந்து, கோப அக்கினியில்
நாளும் வெந்து கணவன் மனைவியாய் ஆடிய கூத்து
விடியலில் கலைந்திட-கயிறறுந்த பட்டமான திருமணம்
விவாகரத்தில் முடிந்திட , நீ யாரோ? நான் யாரோ?
நெஞ்சில் புதிதாய் இனி எவனோ? எவளோ?

வான் நிலவுக்கு மாதத்தில் ஒரு முறை அமாவாசை
மணமக்களுக்கு தேன் நிலவோ சிலநாள்-தேய் பிறையான
மணவாழ்வில் -எந்நாளும் அமாவாசைத் திருநாள்?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-23-06-2023

முதல் முத்தம்

அழகின் அற்புதமோ?-இரவிவர்மன் சித்திரமோ?
ஆயிரம் காலத் தவத்தின் பெருவரமோ?
கம்பன் கற்பனையோ? காளிதாஸன் ஒப்பனையோ
கண் பார்த்து மயங்கிய பேரழகு?

கண்டதும் நெஞ்சுக்குள்-காதல் பூ பூக்க
ஜோடி கண்ட காதல் குயிலாய் இதயம் கூவிக்களிக்க
வண்டு படு கூந்தலில் ஆயிரம் மலர் வாசம்
கண்படும் அழகில்-நெஞ்சம் காதல் வசப்பட்ட நேரம்

கயல் விழிகளில் காதல் நடனமாட, கனிமொழிகளில்
கோகிலம் இசைபாட , மலர் முகத்தில் அழகு பூத்தாட
மன்மத ராகம் பாடும் காமனின் கவியரங்கமா இவள்?
காமசூத்திரம் படிக்கும் காதலின் கலையரங்கமாய் இவள்.

கோவைச் செவ்வாயில் குறுநகை பூத்தாட
பாவை உடலில் மோகனம் இசைபாட
குமுத வாயால் அமுது தந்த குலமகளோ ராதை
கண்ணன் என் மனதில் காதலின் ஆனந்தக் கீதை

அள்ளி அணைத்த பொன்மேனியில் நாணச் சிவப்பு
படர்ந்த முல்லைக்கொடிக்கோ ஆனந்தக் களிப்பு
இணைந்த இதழ்கள் மலைத்தேனின் இனிப்பு
இடை தழுவி மெய் முகர்ந்து காதலரின் இன்பக் களிப்பு

பூ, விழி சிவந்து, பொன் மேனி கனிந்திட நாணத்தின்
வண்ணக் கோலங்கள், இதழ் கொண்டு இதழ் கடைந்து
காதல் மழையில் நனைந்திட மனதில் மோகன ராகங்கள்
பருகியும் விடாய் தணிக்காத இதழ் அமுதம்
கன்னியோ காதற் கடலில் மலர்ந்த குமுதம்

அழகு ததும்பும் தேவதை, அமுத சுரபியை
செவ்வாயில் ஏந்திய காதல் மணிமேகலை
அள்ளிப் பருகியும் வற்றாத காதல் தேன் சுனை-
கள்வடியும் இதழ் கள் கட்டிய காதல் அணை

வற்றாத அமுதாய் செவ்வாயில் பொங்கிடும் முத்தம்
என் விடாய் தணிய-உன் விடாய் தீரும் , காதற் தத்துவம்
காமன் கணைபட்ட நெஞ்சம், கன்னி இதழ்களில் அமுதாய் ஔடதம்

கன்னியும் காளையும் கடைந்த பாற்கடல்
அமுதாய் கிடைத்த முதல் முத்தம்
காதல் பிணி தீரக், கன்னி தந்த ஔடதம்.

இதழோடு இதழ் உரசி, இன்பத்தேன் பொங்க, இரவே
விடியாதே, கதிரே மலராதே, இயற்கையை மனம் கெஞ்ச
இரு மனங்கலந்த இன்பச் சங்கமம்-காஞ்சி
இருக்கக் கலிங்கம் கலைந்த இன்ப அனுபவம்.

காதல் விலக்கப்பட்ட கனியாக-ஏவாள் இல்லாத
ஏதேன் வனமும்-ஆதாம் எனக்கு எரி நரகானது
முதல் காதலும், முதல் முத்தமும் நாளும்
நாளும் என்னை வருத்திடும் நினைவானது

அன்று என் இதழ்களில் அவள் இதழ் கள்ளின் இனிப்பு
இன்று இதயத்தில் முகாரியின் ஓயாத கசப்பு?
விழிகளில் சோகத்தின் சிவப்பு.
நெஞ்சுக்குள் சோக எரிமலையின் தகிப்பு

காதல் எனக்கு ஏனோ சாபமானது.
கனிந்த அவள் இதழ்களின் உணர்வு மட்டும்
இன்றும் இதழ்களில் இனிக்கும் நினைவானது.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-24-06-2023

மையேந்தும் விழியாட

வண்ண மலரோ? வான் நிலவோ, கண் மயங்க
கன்னியோ அழகின் பேரவை, அண்ணலும் நோக்க
அவளும், நோக்க, கண்பார்த்து நெஞ்செழுதிய காவியம்
மண் பார்த்து நாணிய மங்கையோ வண்ண ஓவியம்

பொன்னகையும், பூந்துகிலும் அணிந்த பூங்கொடி-காதல் கிளி
கொத்தாத செம்மாங்கனி, நாணச் செம்மை சூடிய தேன்கனி
மைவிழியில் குறுநகை பூக்க, கார்குழலில் மல்லிகை மணக்க,
கைமலர் கூப்பி வாழ்த்திய கன்னி

கயலும், செவ்விதழ்களும் ஒன்றாய்ப் புன்னகை சிந்த
நத்தார் வாழ்த்துக்கள் சொன்ன கன்னி- நெஞ்சில்
காதல் குயில் பாட, தேடிடும் சோடிக் குயில் இவள்தான்
என மனம் கூற, என் இதயத்தில் பூத்த ஆனந்த ராகம்

என்னை மறந்தேன், எழுத்தை மறந்தேன், மலைத்தேன்
என அழகைச் சுவைத்து மலைத்தேன்-மது வண்டாய்ப்
பார்த்தேன் இரசித்தேன்-இவளின்றி வாழ்வில்லை
வாழ்வே இவள் என்று தவமாய்த் தவமிருந்தேன்

கண்ணே நகையான அழகில்-செவ்வாயில் முத்துப் புன்னகை
கார்குழலில் வாசமல்லிகை, கூப்பிய கைக்காந்தளில்
வணக்கம் வைத்தே, சூடாத பூ தன்னைச் சூடி கொள்ள
சூடிக்கொடுத்த கோதையாய் வாழ்த்துச் சொன்ன பெண்மை
பூ நெஞ்சுக்குள் வாசப் பூவாய் என்னைச் சூடிய பூவை

செவ்வாயில் முத்திருக்க, முத்தெடுக்க கடல் எதற்கு?
பூவையோ வாச மல்லிகை, மாலை தொடுக்கப் பூ எதற்கு?,
இவள் புன்னகையில் பொன்னிருக்கப், பொன்னகை எதற்கு?
காதல் மலர்ந்து, கவிதை பிறந்திடக் கவிஞனானேன்.

அஞ்சன விழிகள், நெஞ்சில் அணையாக் காதல் தீ மூட்ட
செஞ்சந்தனமேனி சுவாசத்தில் நறுமணம் கூட்ட
முத்துப் புன்னகை, செவ்வாயில் நகையணி பூட்ட
நிலவென வியந்தேன்-நித்திலம் என மெய் சிலிர்த்தேன்

கைமலர், காந்தள் என மலைத்திட, பொன்னனி பூண்ட
செம்மாங்கனி, புன்னகை வனத்துப் பொற்கிளி-காதல்
அஞ்சுகத்தை கொஞ்சத் தவித்தே நெஞ்சம் துடித்த ஜோடிக்கிளி

காதலாகி இதயம் துடித்திட, காதற் கடலில் மூழ்கி
காமத்துப்பால் பருகிட-காதல் தேவதையிடம் வரம்
வேண்டி, காதல் தவமிருந்த காதல் முனி நான்

புன்னகை பூண்டு பூவிதழ் சிரிக்க, நாணப் பொன்னணி பூண்டு
பொன்மேனி சிவக்க, பூத்தாடி-பூ விழிகள் களிக்க
கூத்தாடி நெஞ்சம் காத்தாடியாய்ப் பறக்க
வண்ணத்தமிழ் பெண்ணைக் கண்டு கன்னித் தமிழ் மறந்தேன்
வேல்விழிகள் பட்டு காதல் நோயுற்றேன்

குவளை விழிகளில் தேனும், கொஞ்சத் துடிக்கும்
கோவை இதழ்களில் அமுதும் இனிக்க, என்னை அழைக்க,
கூப்பிய கைக்காந்தளில் வணக்கமும், பொன் மேனியில் நறுமணமும்,
கார்குழலிலில் பூவனமும், பூவிதயத்தில் காதலும் மணக்கும்
மங்கையிவள் வான் மகளோ, தேவதையோ என மயங்கினேன்

இராமன் தேடிய சீதையாய், நளனுக்கு மாலையிட்ட தமயந்தியாய்
நான் கண்ட நங்கை-காதல் மங்கை, முத்தக் கடலில் மூழ்கி-
முத்தெடுக்க விடுக்கும் அழைப்பாய்ச் சிரிப்பு-காதல் பித்தனாய்
என்னைக் கலங்கடிக்கும் சந்தனச் சிற்பமாய் இவள் துடிப்பு

தையல் அழகில் மனமும் நெய்யாய் உருக
படைத்த பிரமனும் பார்த்து தந்தையாய்க் களிக்க
இரவிவர்மனும் வரைந்திட வண்ணம் தேடி தன்னை மறந்தான்
கம்பனும் கவிபாட, காளிதாஸனைத் துணைக்கு அழைத்தான்

மலரோ? நிலவோ? ஊர்வசியோ? உயிரை வதைப்பது,
சுட்டும் சுடர்விழிச் சுந்தரி, சுந்தர காண்டத்து மைதிலி
காமனைக் கலக்கிடும் பைங்கிளி, கண்பட்ட நெஞ்சம்
காதலால் துன்புற, உயிர் மெய்யில் காதல் ஆய்தம் தரித்த
கன்னித் தமிழா இவள், கம்பன் கவிதையாய் இவள்

வல்லினம், மெல்லினம், இடையினம் கலந்த
வண்ணத் தமிழ், மதுவண்டும், தேனியும் கண்டு மயங்கிட
காளையர் நெஞ்சம் காதல் போதையுற
அழகின் பொற்சிகரமாய் இவள்.

கண்டதும் நெஞ்சில் -காதல் தீப்பிடிக்க, காமன் கணைபட்டு
கலைமானாய் மனம் பதைக்க, இளைத்தேன்
காதல் நோயுற்றுத் தவித்தேன், காதல் கனியை உண்டு சுவைத்திட
உணவை மறந்தேன், என்னுயிரே இவள்தான் என என்னை மறந்தேன்

சித்தன்ன ஓவியமோ-சிற்றிடையாள்
காசியப்பனும் வரையாத சிகிரியாச் சித்திரமோ?
ஆடிப்பெருக்கெடுத்த அழகிய காவிரியா
அழகு பொங்கிடும் மிதிலையின் ஜானகியா?

கம்பனின் சீதையா? சிலம்பொலிக்கும் கண்ணகியா?
காளிதாஸனின் சாகுந்தலையா? நெஞ்சம் தவித்தேன்
முத்தேவியர் அழகும் என் தேவியில் ஒளிர
கண்ணகையில் புன்னகை மிளிரக் காதலாகித் துடித்தேன்

மையெதற்கு மான்விழிக்கு?, மலர் எதற்கு கார்குழலிக்கு?
புன்னகை இருக்க பொன்னனி எதற்கு ? கண்ட விழிகளும்
மலைத்தேன் சுவைக்கும், காதலான நெஞ்சம் முக்கனியாய் இனிக்கும்,
முத்தச்சுவை நித்தம் சுவை என்றே வள்ளுவனை மனம் துதிக்கும்.

பூத்த பூ விழிகள் காதல் மழை பொழிந்திட,
கூப்பிய கைமலரில் பரதம் கூத்தாட-என் இதயத்தில் பூமழை,
ஓடிடும் குருதியினும், உலாவிடும் சுவாசத்திலும் காதலின் திருநிலை
கண் பார்த்து நெஞ்செழுதிய காதலில் ஜானகி ராமனின் தவநிலை

பாலாடை சூடிய காமத்துப்பால், பூவாடை வீசிவரும் பெண்பால்
வேல்விழியால் காதல் சொல்லும் கனிமொழிாள்
கூப்பிய கரங்களுக்குள் காப்பியமாய்க் காதலை கொண்டாள்
காதல் தேவதையாய் காட்சியும் தந்தாள்

கார்குழலுக்கு மலர் வைத்தாள், கயல்விழிகக்கு மையிட்டாள்
நெற்றிக்குச் சுட்டியும், -நுதலிற்குப் பொட்டும் வைத்து
நூலிடைக்கு காஞ்சியும், செம்பாதங்களுக்கு நூபுரமும்
பூண்ட நங்கை, நெஞ்சத்தில் என்னை வைத்த காதல் கங்கை
மையெழுதிய கயல்விழியாள் என் நெஞ்சில் காதல் மொய் எழுதி
நெய் எழுதிய கார்குழலில் -பூவாய் என்னைச் சூடிய பூங்குழலி

எண்சான் உடலில் இத்தனை அழகை எப்படி வைத்தான் பிரம்மன்
மனம் வியக்க, கவி படைக்க-கையளவு மனசுக்குள் கடலளவு காதலை
கண்ணாள் வைத்தாளா, கன்னி அழகால் வைத்தாளா? மைதிலி

என்னென்பேன் என் இன்பத்தைச் சொல்லறியேன் வார்த்தைகளில்
சுவைத்திட முக்கனிச் சுவை, பருகிட காமத்துப்பாலாய் ஔவை,
அழகின் பேரவை, வாழ்வோ காதல் திருச்சபை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-24-06-2023

நடிகையர் திலகம்

காலங்களில் அவள் வசந்தம், கலைகளிலே
அவள் ஓவியம்-மாதங்களில்
அவள் மார்கழி, மலர்களிலே அவள் மல்லிகை

காதல் மன்னன் கணேஷின் வாழ்வில்-காதலி சாவித்திரி
கழிந்துபோன காலங்களில் கடந்து போன ஒரு வசந்தம்
காதல் ராணி சாவித்திரியின் வாழ்வில் காதல் கணவன்
ஜெமினி கணேசனோ, காலத்தில் வந்த ஒரே வசந்தம்



மறக்க முடியாத காதலை-துறப்பதாக நடித்து
மதுவில் மூழ்கிய மங்கை-தேவதாஸாய்
தன்னை அழித்த நங்கை

மோகத்தில் வீழ்ந்த மனம் காதல் சொல்ல
மோகமும், காதலும் புரியாத நிலையில்
காதலென்றே கன்னியும் இரண்டாம் தாரமாய்
கணேஷனுக்கு மனைவியான நிலை

நடிகையர் திலகமாய் சாதனை படைத்தவள்
வாழ்வில் நடிக்க தெரியாது -மண
வாழ்வைத் தொலைத்த பார்வதி

எல்லாம் நாடகமான உலகில், எல்லோரும் நடிகர்களாக
நடிப்பு எது? நிஜம் எது? புரியவில்லை
நிலை மாறும் உலகில் எதுவும் நிரந்தரமல்ல
காதலும் கன்னியருக்கு சுதந்தரமில்லாத அவல நிலை

காதல் மன்னனாய் கணேஷின் பெயர் நிலைக்க
பலதாரக் கண்ணனாய் காமம் சுவைக்க
இரண்டாம் தாரமாய் வாழ்வைத் தொலைத்த
நடிப்பின் ஆதாரம்-புகழின் அவதாரம்

புகழும், பணமும் மனைவியைச் சேர
புழுங்கிய மனம் இன்னொருத்தியை நாட
கட்டிய தாலியை காதலால் மறைத்தவளே
கண்ணீர் வேலியிட்டு காதலைத் துறந்தாள்

வருமானவரித் துறை சொத்தைப் பறிக்க
தயாரித்த படங்களும் தோல்வியில் முடிந்திட
மாளிகை வாழ்வும் கனவாகி-கடனாளியாகி
வாடகை வீட்டில் குடிவந்த சோக நிலை

சினிமா உலகின் மகாராணி-சேடியாய் ஏனும்
நடிக்கப் பாத்திரம் தேடிக் களைக்க
அள்ளிக் கொடுத்த கைகளுக்கு-இறுதியில்
கிள்ளிக் கொடுக்க யாருமில்லை

அன்பைச் சொல்லிக் கொடுத்த பெண்மைக்கு
அன்பை திருப்பிக் கொடுக்க
கணவனுமில்லை-காதலுமில்லை.

மாங்கலயம் தராத அமைதியை
மதுவும் தரும் மாயையில்-மூழ்கிய மங்கை
பல வருடம் கோமாவில் கிடந்து
மரணத்தை தழுவிக்கொண்ட அம்மை

திறந்த கதையில் மறைந்த துயரம் தெரிய
நினைத்துப் பார்க்கையில் நெஞ்சின் கனம் புரிய
காதலின் சோகம் தெரிய-தேவதாஸீக்காய்
கதறும் பார்வதியின் காதலிது, கதையிது

எல்லாம் மாயயை தானா-பேதை எண்ணம் யாவும் வீணா?
ஏழை எந்தன் வாழ்வில் இனி இன்பம் காண்பேனா ?
இணை பிரியாத சிநேகம் மறந்தனயோ?
தேவதாஸ் புகழும் புழுதியில் கிடந்திட
பார்வதியின் கதறலாய் முடிந்த சாவித்திரி வாழ்வு

சாவித்திரி கழிந்துபோன சினிமா உலகின் வசந்தம்
வண்ணம் கலைந்துபோன காதல் ஓவியம்
முடிந்துபோன வருடத்தின் மார்கழி -மாலை வருமுன்
காதல் தீயில் கருகி உதிர்ந்த மல்லிகை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-25-06-2023

நீ-நான்-அவன்

நானும் நீயும் எதிர் வீட்டுகாரர்கள், இளமையும்,
அழகும் என்னில் வசந்தமாய் பூத்துக் குலுங்க
எதிர் வீட்டு யன்னல் மூடாத வான் கதவாய்த் திறந்து கிடக்க
எந்நேரமும் நீ இரசிக்க, யன்னல் நிலாவாய் என் தோற்றங்கள்
உன் விழிகள் கொத்த- கொய்யாத கனி என்னில்
காதலின் கனிந்த மாற்றங்கள்.

கண்களால் காதல் விதை நீ தூவ, மோகமா? காதலா?
அறியாத பேதை நான், காதலில் விழுந்தேன்-என்
வீட்டின் வறுமை கலைய, உன் உதயம்
காதல் பூபாளம் பாடும் என் இதயம்

தொட்டுத் தழுவ நீ துடித்தாலும், நாணி நான் மறுத்தாலும்
எரிக்கும் அணையாத காமத்தீ இருவர் நெஞ்சையும் எரிக்க
காதலாகிப்போனோம், காதல் வானம்பாடிகளானோம்

முன்பனிக்காலப் பனியாய் உன் பார்வை
என் மேல் விழும்போதெல்லாம் சிலிர்த்த என் மேனி
உன் தழுவல்களுக்காய் தவித்த கன்னி
அந்தி மாலையில் யன்னலில் நீ யாத்த காதல் வேள்வி

திரைகடல் ஓடித் திரவியம் நீ தேட, உன் காதல் திரவியமோ
காதலில் வாட, கால வெள்ளத்தில் நடந்தேறிய
என் கட்டாயத் திருமணம், கடல் கடந்து வந்து
ஸ்ரீராமனாய் என்னை மீட்க நம் திருமணம்.

என் செவ்வாயும் உன் முத்தங்களால் சிவப்பாகமல்-
என் நூலிடையும் உன் அணைப்பால் நெகிழ்ந்து சிலிர்க்கமல்
காதலில் என்னை உழுது காமத்தில் உன்னை விதைத்த
நமக்கோ மூன்று குழந்தைகள்

காலவெள்ளத்தில் என்னை மறந்து, காசே உன் கடவுளாக
காதல் தீயில் வேகும் என் மனசு, கணவன் உனக்கு புரியவில்லை
கட்டையாய் கிடந்த என்னை காமக்கறையனாய் நீ அரித்த நிலை-
ஏனோ வன்புனர்வு என உனக்கும் புரியவில்லை

கடைவிழி கசியும் கண்ணீர் தலையணையை ஈரமாக்கும்
விறைத்த குறி துப்பிடும் விந்து எனக்கு அருவெறுப்பூட்டும்

நண்பனாய் வந்தவன் அழகை சிலாகிக்க, கவிஞனாய் வர்ணிக்க
காதல் காய்ந்து போன உன் பாதையோ வரண்ட பாலைவனம்-
புதிய காதல் நதி பாயும் என் வாழ்வோ வற்றாத நந்தவனம்.

என்னுள் எரியும் மோகத் தீயை அணைத்தே, அவனும் அணைக்க
அணைக்க வளரும் காமத்தீயில் எரிந்து எரியாத காதல் செடியாய்
நான் தகிக்க -என் பஞ்சணையில் தொடர்ந்த காதல் வேள்விகள்
என் பொன்மேனியில் இசைத்த மன்மத ராகங்கள்

சுற்றும் மெல்லிய கொடியாய் என் சுந்தர இடையை அவன் தழுவி
செவ்வாயில் இதழ் பாதிக்க, சிவந்தது செவ்வாய் மட்டுமன்றி
செழித்த என் அழகும் என்றே நான் களிக்க-
உச்சி முதல் பாதம் வரை முத்தங்களால் என்னை அளக்க
அழகுகோ அளக்க முடியாத ஆழம் என அவன் தவிப்பு

அணைத்த கரங்களுள்-முல்லைக்கொடி படர்ந்து பூத்துக்குலுங்க
கரையாய் கிடந்தவளை அலை அலையாய் வந்து-ஓயாமல்
அணைத்துச் செல்லும் காதலின் அலைகள், கனவிலும்
நினைவிலும் என்னைக் கரைத்த அவன் காதல் நிலைகள்.

காதலின் இரசனை அறியாத கணவன் நீ-தாழிட்ட கதவைத்
தட்டித் திறந்த உன் பார்வையில் கௌதமனின் சாப நிலை.
என்னை எரிக்கும் காமத் தணலை நீ அணைத்திருந்தால்-வாழ்விலும்
காதல் வேள்வியை தொடர்ந்திருந்தால் அகலிகையாய் ஏன் என் நிலை?

என்னைத் துறந்து நீ போக, உன்னை துறந்து நான் வாழ
நான் பத்தினியல்ல-சாமானியப் பெண்
இன்று நீ வேறு நான் வேறு, நல்ல நண்பர்கள்
என்று நம் கதை தொடர நாம் வாழும் தேசம் வேறு

அழகிய பெண் வாரிசுகளை விட்டு விட்டு
ஆண் வாரிசை நீ எடுத்துச் சென்றாய்
பெண் வாரிசுகளை நான் பெற்றுக்கொண்டேன்
வாழ்வைப் புரட்சியாய் வாழக் கற்றுக் கொண்டேன்

இறுக்கங்கள் இல்லாத வாழ்வு எனக்கு இதமளித்தது.
என்னைச் சுற்றிய உன் மோக வலையும் அறுந்திட
காதல் புது வசந்தம் சொல்லியது

உன்னோடு வாழ்ந்த காலங்கள் நன்றே
என்னோடு நான் வாழும் காலங்களும்
நன்றே என்றும் வசந்தமே

காதலுக்கு வயதில்லை காதலிக்கவும் வயதில்லை-
காதலில்லாக் கணவன் மனைவி உறவு பாலைவனமே
ஒட்டாத மனங்கள்-ஒன்றாய் வாழ்வதிலும்
பிரிந்து வாழ்வது உத்தமமே

என் இமைச் சிறகுகளுக்குள் இன்றும். என்றோ
நிகழ்ந்த நம் இனிய பந்தம்-என் வாழ்விற்குப்
பொன்விலங்கான நம் திருமணபந்தம்.

உன் வீட்டு முற்றத்தில் கல்லாக, நான் அகலிகை அல்ல
நீயும் கௌதமன் அல்ல, ஆணினம் ஆளத் துடிக்கின்றது
பெண்ணினம் வாழத் துடிக்கின்றது,
அறியாப் பருவத்தில் நனைந்த
காதல் மழையின் ஈரம் காய்ந்துபோனது
காமம் பட்டு கல்லான மனம் காதலால் செழிக்க
என் புது வாழ்வு பூத்துக் குலுங்குது.

காமக்காளையின் மேய்சல் நிலமல்ல பெண்மை,
கசக்கும் திருமணம் காலத்தின் தேவையுமல்ல
காதல் அன்பின் சுதந்திரம்
காதல் பெண்மையின் சுயம்வரம்.

என் பொன்மேனியில் காமத்தூசு, உன் மனதிலோ பணத்தின் மாசு
பொற்கூண்டில் வாழும் கிளியல்ல நான்-உயரத்தில்-
விரிந்த ஆகாயத்தில் சிறகு விரித்துப் பறக்கும் சுதந்திரப் பறவை
இறக்கை முளைக்க எழுந்து பறக்கின்றேன்
என் கானத்தை விரும்பி இரசிக்கின்றேன்.

இல்லறம் என்பது -நீ உழுதிட மஞ்சத்தில்
நான் மல்லாந்து கிடக்க தந்த உரிமம் அல்ல
அன்பு மனங்கள் இணைந்து சுவைக்கும்
காதல் விருந்தே சுதந்திரம்.
காமத்துப்பாலே இனிக்கும் காம சூத்திரம்

பூவை வருத்தாத வண்டின் மென்மையே காதல்
நான் விழித்துக்கொண்டேன், காதலைப் புரிந்துகொண்டேன்
உன் உலகிலிருந்து என்னைப் பிரித்துக் கொண்டேன்

அகலிகை மனதிலோ காதலின் வசந்தங்கள்
முனிவன் மனதிலோ பாலையின் வெப்பங்கள்
காமனை வெல்லப் பத்தினிக்கும் காதல் கணவன் தேவை
இந்திரனுக்கு காமம் தணிக்க பூவையின் தேவை

கிளியும், வௌவாலும் கோந்த பழங்களோ மண்ணில்
நாளும் புதுப்பழம் நாடும் பறவை இனங்களோ வானில்
விலக்கப்பட்ட கனியும் ஆதாமைப் புரிந்திட-ஏவாளிற்கு
அறிவானது, காமத்திற்கு பெண்மை உணவானது

விந்தும் பாம்பும் வடிவங்களில் ஒன்றே
யோனியில் நீந்துவதும் மூழ்குவதும்
இந்திரனுக்குச் சாபம்-யயாதிக்கு வரம்?
கண்ணனிற்கு லீலை, பாஞ்சாலிக்கு- நிர்ப்பந்தம்

பெண்மையின் ஆழத்தை ஆண்களால் புரியமுடியாது-
பெண்மை தன்னை திறந்து மலர்ந்து ஈந்தால் ஒழிய
ஆண்மை பெண்மையைத் தொட முடியாது

மனதை தொடாத தொடுகை எல்லாம் வன்புணர்வே
இல்லறத்திலும் வன்புணர்வுகள் அவலக் கதைகளே,
பெண்மை போர்கொடி ஏந்தாதவரை-உலகு
அறியாத இரகசியங்களே, துயரங்களே

விறைத்த ஆண்குறி விந்துகளைத் துப்பிட
விளை நிலமாய் களையையும் பயிரையும் ஏற்பது
தரிசுநிலமல்ல-தாய்மையின் புனித கருவறையே
புரிந்தால் காதலை வாழ்த்துங்கள்

காதல் பந்தமல்ல சுதந்திரம்
காதல் பொற்கூண்டல்ல விரிந்த ஆகாயம்
காதல் ஆண் பெண் உறவல்ல, அன்பின் கருவறை
ஆணவத்தின் கல்லறை,
நான் அல்ல, நீ என்பதே காதல்


நாளும் சுக்கிலத்தில் நீராட மனைவி
ஒன்றும் விலைமகளல்ல- கலைமகள் கைப்பொருள்
கலைஞனாய் மீட்டினால் காதற் சுரம்
காமுகனாய் மீட்டினால் வாழ்வே அபசுரம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-25-06-2023

ஓ!என் பாரதத் தாயே

மனுதர்மம் மானுடத்தை சாதியத்தால் பிரிக்க
மதவாத சாம்ராஜ்யத்தின் முடி சூடா மன்னர்களாய்-
உயர் ஜாதி இந்துக்கள், மண்டியிட்ட சூத்திரனாய்
இன்றும் தாழ்த்தப்பட்ட தலித் மக்கள்.

உயிர்களை வதைத்து, நகரங்களை முடக்கி கொரோனா அச்சுறுத்த
புகலிடமின்றி, உயிர் பிழைக்க் கிராமங்கள் நோக்கிப்
பல்லாயிரம் தலித் மக்களின் பாதயாத்திரை, காணாளி பார்த்து
கண்ணாடிபோல் இதயம் நொருங்கிட, கண்களில் நீர்த்திரை



வர்த்தகச் சந்தையின் மலிவுக் கூலிகய், நித்தமும்
ஊரைச் சுத்தம் செய்த சூத்திரஜாதிகள்-நடைபாதையில்
கூடுகட்டிய ஏழைகள்-கொரோனா அச்சுறுத்த
சேரி நோக்கி விரட்டப்பட்ட தேசாந்தரிகள்

சந்திராயனைத் திங்களுக்கு விட்ட தேசம்
பரிதவிக்கும் ஏழைகளை -கட்டாய
பாதயாத்திரை செய்யவிட்ட நாசம்

கழுதைகளாய் உடைமை சுமந்து பல மைல் நடந்து
தெருவில் உறங்கி- சேரி நாடி தீண்டாதன் யாத்திரை
தாண்டி யாத்திரை செய்த மகாத்மாவிற்கு
நேராத சத்திய சோதனை.

நாய்களுக்கு கூண்டுகளும், பசுக்களுக்கு தொழுவங்களுமிருக்க
தாழ்ந்த ஜாதி-மலிவுக் கூலியின் பரிதாப பாதயாத்திரை
தீண்டாமையின் புதிய சூத்திரம்-மனிதநேயமில்லா
இந்து மதவாதத்தின் தரித்திரம்



மடிந்தவரை புதைத்து, சோகத்தை மறைத்து
மரங்களில் பரணமைத்து- காக்கை குருவிகளாய்-மானுடம்
தம்மைத்தாமே தனிமைப்படுத்திக் கொண்டு
சேரியை காக்கும் சேவை, காந்தியம் காணாத புதுமை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-26-06-2023

ஒரு நதியின் கதை

அந்தி மாலை நேரம் யூப்பிரடிஸ் நதிக்கரையோரம்.
ஓடும் நதி கால்களை வருடி உறவு சொல்ல, கரையமர்ந்த
முதியவர் கண்கள் தொடுக்கும் கண்ணீர் மாலை-
கரத்தில் மெல்ல உருளும் தஸ்ப மணிமாலை

வானை அண்ணாந்து பார்த்து மனம் குமுற-ஹே அல்லா!
விட்ட பெரு மூச்சு அல்லாவைச் சுட்டது.

வெள்ளிக் கொலுசு குலுங்க, சல சல என பாய்ந்தோடிய குமரி-இன்று
சத்தமின்றி, சந்தமுமின்றி குமுறிடும் உள்ளத்தோடு தள்ளாடித் தவழ
செழித்த உடல் கறுத்து நாறிட வெதும்பிடும் தந்தை உள்ளம்

செத்து நாறிய மீன்கள், கொத்துக் கொத்தாய் மிதந்து கரை ஒதுங்க
துர்வாடை நதியையும், நாசியையும் நாறடிக்க, குடிக்கவும்,
குளிக்கவும் முடியாத, தூர்ந்த நதியின் அலங்கோலங்கள்

பல நூறு குடும்பங்களுக்கு வாழ்வாதாரமாய் நின்ற தாய்-
பால் வற்றிய மார்போடு வனப்பிழந்து குமுறி அழ,
குலமகளையும் வன்புணர்ச்சிக்காளாக்கிய கோர யுத்தம்
நதியிலும், கரையிலும் நாறிய மனித இரத்தம்

நஞ்சான நதியில் நாணல்களும் வாடிக்கிடக்க, துள்ளி விளையாடிய
மீன்களும் செத்து மிதக்க, உண்டு களிக்க நாரைகளுமில்லை,
விற்றுப் பிழைக்க மீனவக் குடும்பங்களும் இல்லை

வீசிய பல்லாயிரம் குண்டுகளால் உயிர் நலிந்து மெய் சிதைய,
எண்ணெய்களும், இரசாயனங்களும் நதியோடு கலந்து
தாய்ப்பாலை நஞ்சாக்க, பிணமான பல்லாயிரம் மீனினம்
உருமாறிக் கருத்து உள்ளம் வெதும்பிடும் தாய் மனம்

நதியிலே மீன் பிடிக்க நாரைகளோ, மீனவனோ இல்லை,
மீன்களும் இல்லை, நாவரண்டு நெஞ்சுற்ற தாகம் தீர்க்க
நதி நீரோ நஞ்சான அவலநிலை-நீர்ப் பாய்ச்சி
தோட்டங்களும் வரண்டு பாலையான கொடு நிலை

வேர் விட்ட மண் விட்டு, விழுது விடப், புது இடம் தேடி
இடம் பெயர்ந்த உறவுகளால் உருக்குலைந்த ஊர்-
வனப்பிழந்த நதி, காணாமல்போன நாரை
மீன் கொத்திப் பறவை, எங்கோ கரையும் ஆந்தை

பல நூறு குடி மனைகயோடு செழித்த ஊர்
ஒரு சில மனைகளோடு காட்சி தர
வல்லுறவாய் நடந்தேறிய கொடுமை-வாழ்வளித்த
நதியின் தாய்மையை அழித்திட்ட சிறுமை

அட்சய பாத்திரமாய் -மீனை அள்ளித்தந்த அன்னை
நீரைப் பாலாய்க் கொட்டி தந்த தாய்மை
பூசையும் வழிபாடுமின்றி புண் பட்ட உள்ளத்தோடு-
கண்பட்டாற்போல் கலங்கி மெல்ல ஓடிட வந்த முதுமை

குண்டு சத்தம் கேட்கும் போதெல்லாம், உடல் நடுங்க
கரைமோதி அழுகின்றாள், வரம்பின்றி வீசிய குண்டுகள்
வாழ்வளித்த தாயின் கருவையும், உயிரையும் சிதைத்திட-செத்து
மிதந்த பல்லாயிரம் மீன்கள், வாழ்வாதாரமின்றி அகதிகளாய்
இடம் பெயர்ந்த ஆயிரமாயிரம் மீனவக் குடும்பங்கள்

நினைவேடுகளைப் புரட்டிப் பார்க , இளமைக்காலம் திரும்பிவர-
கண்களில் ஆயிரம் கனவுகள் பொங்கியெழ-அன்று
நதியெங்கும் குதுாகலித்து மீன் பிடித்த படகுகளோ பல நூறு
கரையெங்கும் செழித்த தோட்டங்களோ பசுமையின் வரலாறு

நாணல்களும், நதியின் புகழ்பாடிக், காற்றில் நடனமாட
துள்ளி விளையாடி மீனினம் ஆனந்தக் கூத்தாட, கடற் காகங்களும்,
நாரைகளும் மீன் பிடித்து பசியாறக், கரையும் நதியும் களை கட்ட
கரையெங்கும் திருவிழா என என அலைமோதும் மக்கள் கூட்டம்

ஒரு நதியின் வாழ்வில், கோர யுத்தம் இழைத்த கொடுந் துன்பங்கள்
ஆறாத ரணமாக, வல்ல அல்லாவும் காத்து அவலம் தீர்ப்பாரென்று
ஆழியைத் தேடி-புகலிடம் நாடி அகதியாய் ஓடும் தாயாய் நதி

வாங்கொலி கேட்க முதியவரும், உயிரோடு ஒட்டிக் கலந்த பேருறவை-
தாயாய் வாழவைத்த அன்புறவைப் பிரிய மனமின்றிப் பிரிகின்றார்
உதிர்ந்த கண்ணீர் துளிகள் நதியில் கலக்க-கால்களை நனைத்த
நதி தாயாய் அணைக்க, குமுறிக் குலுங்கி அழும் உறவுகள்

செத்து மிதக்கும் மீன்களை மடியில் சுமந்து, மௌனமாய் அழுது,
மயான ஊர்வலமாய் மெல்ல ஓடும் தாயின் தேகமெங்கும்
யுத்தத்தின் கொடிய காயங்கள், இதயத்திலோ
வன்புனர்சிக்காளான பெண்மையின் ஆறாத அவலங்கள்

இடம் பெயர்ந்த நாரைகளும், நாதியற்ற மீனவ குடும்பங்களும்
இன்றும் அகதியாய் வாழ, நடந்தது போரல்ல-இனவழிப்பும்
இயற்கை அழிப்புமான, மனித உரிமை மீறல்கள்

யா அல்லா!

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-26-06-2023

பாடி அழைத்தேன் உன்னை

ஏனடி என் நெஞ்சுக்குள் இனம் புரியாத இந்த வேதனை?
என் காதலே என்னைக் கொல்லும் அன்புச் சோதனை,
எரி நரகாய் வாட்டும் பிரிவில் இதயம் வேக
காதற் சிலுவையில் என்னை அறைந்த தேவதை

என் வீணையும் அழ, என் கானத்தில் சோக மழை
தந்தி அறுந்திட என் யாழிலே முகாரியின் இசை
புள்ளி மானாய் துள்ளி திரிந்த உள்ளம் முடமானது,
கானம் பாடிய புள்ளிக்குயில் கேவும் நிலைக்கானது

உறவும் பொய்யாக-வாட்டும் காதல் நிஜமாக
கண்டு சுவைத்ததும், கதை பேசி மகிழ்ந்ததும்
கவிதை பகிர்ந்ததும், கனவாய் போனதடி-காதல் நிலவே
நீயின்றி வாழ்வு அமாவாசையானதடி?

உன்னோடு வாழ்ந்த நாட்கள் வசந்தத்தைக் காட்ட
உன் பிரிவோ கடும் கோடையாய் என்னை வாட்ட-
வசந்தமோ போனது, சோகமோ நிலையானது
என் வானில் நிலவில்லை, என் வழியில் ஒளியில்லை
என் காதலே, நீயின்றி என் மனதில் நிம்மதியில்லை

நிலவென கண்டு மகிழ்ந்தேன், வானமுதென உண்டு மகிழ்ந்தேன்
வாசமலரெனச் சூடி மகிழ்ந்தேன்-இன்று நாடிழந்த மன்னனாய்,
முடியிழந்து தவிக்கின்றேன்-என் காதல் தேசமே-உன்னைப் பிரிந்து
சோக வனத்தில் சிறைவாசம், பாலை வனத்தில் வனவாசம்,?

பாடி அழைத்தும் நீ வரவில்லை, கூவி அழுதும் பதில் தரவில்லை
வாடி உதிரும் மலரானேன், தேய்ந்து மறையும் நிலவானேன்
பூவனமான உள்ளம், புண்ணானதடி, சோடிக் குயிலாய்ப்
பாடிய நெஞ்சம் ஒற்றைக் குயிலாய் கேவிக்கரையுதடி
காதல் முள்ளா? மலரா? காதல் ரோஜாவே சொல் நீ

வட்ட முகமும்-வளைந்த புருவங்களும் முத்துப்பல்லும் ,
மோகனப் புன்னகையும்- குமுத வாயில் அமுதும்,
பூங்குழலும்-கொடியிடையும், காதலே கனவிலும் என்னைக்
கொல்ல ஏனடி பிரிந்தாய்? என்னை மறந்தாய்?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-06-2023

பார்வை ஒன்றே போதுமே

அணைக்கும் குவளை விழிகள் நெஞ்சில் காதல் தீயை வளர்க்க
மணக்கும் சுந்தரியின் சுகந்தம் மகிழ்ந்தே சுவாசத்தை நிறைக்க
செவ்விதழ் பூத்த புன்னகையில் நெஞ்சம் இறக்கை விரித்துப் பறக்க
கண்மலர் தழுவிக், காதல் போதையில் தள்ளாடிய என் மனம்

மொழி மறந்து விழி பேசி, சுகம் தரும் பார்வையில்
ஆயிரம் பூக்களின் சுகந்தம்-சுந்தரனின்,
நெஞ்சுக்குள்ளே காதலின் புது வசந்தம்

சுந்தரியின் புன்னகையை, பொன்னகையாய்ச் சூடி மகிழ்ந்த நெஞ்சில்
காதல் நர்த்தனம், இமைக்க மறந்து விழிகள் -மது வண்டாய்
பூமுகத்தை மொய்த்து மயங்க, கண்வழி நுழைந்து இதயத்தை நிறைத்த
காதலின் சுகந்தம், வாழ்விலே புது வசந்தம்

துடிக்கும் இமைகள் துடியிடையாளை மறைக்குமோ?
தடுக்குமோ? தவித்தே இதயம் துடிக்க, கண்களும்
காந்தப் புலமாய் மாறி கன்னியைக் கவர்ந்தே இழுக்க
உயிர் துடித்து மெய் சிலிர்க்க, இதுதான் காதலா?

மொழிகடந்த மௌனத்தில், மோகனத்தை மனம் இசைக்க
இறக்கை விரித்து இதயம் எழுந்து பறக்க
விழிகளின் அணைப்பில் விசும்பு கடந்த வியப்பு.
என மனம் கவர்ந்த வண்ணப்பூவோ வனப்பு
இதயத்தில் காதலின் குதூகலிப்பு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-06-2023

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்

பெற்றோரையும், பிறந்த பொன்னாட்டையும் விட்டுப் பிரிந்து-
அந்நிய தேசத்தில் வேர் கொண்டு விழுது விட்டாலும்
பேசிய நற்றமிழை நெஞ்சம் மறக்குமோ?
உண்ட தாய்பாலையும், கொண்ட உறவுகளையும்
உள்ளமும் வேண்டாமென ஒதுக்குமோ?

அழும்போதும் அம்மா என்றே அழுகின்றோம்-இடறி
விழுந்தாலும் அம்மாவைக் கூவி அழைக்கின்றோம்
சோகம் நெஞ்சை நொருக்கும்போது தாய்மடி தேடுகின்றோம்

சொத்தாய் கோடிகள் வந்தாலும் சொப்பன சுந்தரி-தாரமானாலும்
பொற்தட்டில் உண்டாலும் தாயின் கை பக்குவத்திற்கு
பாஸ்ட்டவும், பீட்ஸாவும் ஈடாகுமா?-அன்னையின்
கூழுக்கும், கஞ்சிக்கும் அமுதும் இணையாகுமா?

சுடுசோறும், சுட்ட கத்தரிச் சம்பலும், மீன் குழம்பும்,
பாற் சொதியும், தயிரும் தாய் அன்பைச் சொல்ல
அம்மாவின் கை பக்குவத்திற்கு நிகரேது?

அன்பைக் கொட்டிச் சமைக்கும் தாய்மையில்
இன்பம் எல்லாம் பூரித்து நிறைந்திருக்க, இதயம் பூவாய்
மலர்ந்து சிரிக்க கூழானாலும், கஞ்சானாலும்
தாயின் கையில் அமுதாய் மாறும் அற்புதம்தான் என்னே?

ஊட்டிவிடப் பிசைந்த ஒரு கவளமும்-ஏழ் உலகிற்கு
ஈடாகுமா? குழந்தை உறங்கிடஅவள் பாடும் தாலாட்டிற்கு-
ஏழு ஸ்வரங்களும் போதுமா? இன்று நினைக்கையிலும்-
நெஞ்சிலே அன்பு சுரக்க-வாய் அம்மா என்று
அழைக்கையில் குழையும் நெஞ்சம்-கசியும் கண்ணீர்

பனியும், குளிரும் வாட்ட, பசி மறக்க பீட்ஸாவும்,
பாஸ்டாவும் உண்டு, மாற்றான் தேசத்தில் வாழ்ந்தாலும்
நெஞ்சுக்குள்-பிறந்த பொன்னாடும், அன்னை ஊட்டிய சோறும்
அன்று கண்ட கனவாய் போனதே! இதயம் சோகத்தில் வாடுதே

பொன்னைக் குவித்துப் பொற்தட்டில் உண்டாலும்,
மாடமாளிகையில் வாழ்ந்தாலும்- தாய் மண்ணில்
தாய் தந்தை உறங்க நெஞ்சம் பதறுதே?
கண்களில் கங்கை பொங்குதே

உண்ணும்போதும், உறங்கும் போதும்
அம்மா அப்பா அருகில் இல்லை, உறவுகளை
எண்ணும்போதும் "வாட்ஸ்அப்பும்," "வைபரும்" "ஸ்கைப்பும்"
உதவிக்கு வந்தாலும் உண்மை உறவு அங்கில்லை

ஒப்புக்குச் சிரித்து உறவுக்கும் பொய் முகம்
காட்டும் இயந்திர வாழ்க்கையில்
இதயமும் இயந்திரமாகிட எதைச் சாதித்தோம்?

மகா அலெக்ஸாண்டரும், சாம்ராட் அசோகனும்
கொன்று குவித்து வென்ற ராஜ்சியங்கள் எங்கே?
சாம்ராஜ்யங்கள் சரிந்து மண்ணோடு மண்ணாக,
அசோகரும், அலெக்ஸாண்டரும் கொண்டு போனதும்,
ஏதுமில்லை, கொண்டு வந்ததும் ஏதுமில்லை-
பாவ புண்ணியமே நம் சொத்து

பெற்ற தாயையும், பிறந்த பொன்னாட்டையும் இதயம் நினைக்கையில்
இயந்திரமயமான வாழ்வில் இனிய கனவுகளாய் கழிந்த காலங்களை
எண்ணி மனம் ஏங்க, குளிர்சாதனப் பெட்டியில் தூங்கும் உணவைச்
சூடு காட்டி உண்ணும்போது விழிகளில் துளிர்க்கும் கண்ணீர்
தாயை நினைக்க தவிக்கும் பிள்ளையின் நெஞ்சில் செந்நீர்

தெருவில் நடந்திட- நண்பர்கள் கண்டு மகிழ்ந்திட
பூவாய் மலரும் உள்ளம் அங்கே
பனியாய் இறுகிய இதயங்களோ இங்கே

சூடும், சுவையுமில்லா உணவை நாளும் உண்டு
நா செத்து சுவை மறக்க-
அன்னையிட்ட அமுது நினைவில் இனிக்க
எண்ணிப் பார்த்து இதயம் விடும் துன்ப பெருமூச்சு

ஓ என் தாயே! ஓ என் ஈழத்தாயகமே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-06-2023

பிரிய தோழி

தொலைபேசியில் காதலின் அழைப்பு தேவகானமாய்
ஒலிக்க-மனதிலே பூ மழை,
இறக்கை விரித்துப் பறக்கும் இதயத்தில் கானமழை

மறந்தாயோ என்றிருந்தேன், எப்படி மறப்பது?
என்றவள் குரலில் காம்போதியும் -கல்யாணியும் கலந்த
மாறாத நேசம், இதயவீணையில் காதலின் இன்னிசை வாசம்

பிரியாத உறவாய்-கலையாத கனவாய் உரையாடல்,
காயமானதும் இவளால்- காதலானதும் இவளால்.,
எண்ணித் துடிக்கும் இதயம் , என்றும் மறவாத
கவிதை, எழுதிக் களிக்க வாழ்வில் புது உதயம்

நெற்றிச் சுருளும்- நீள் விழிகளும், முத்துப்பற்களும்,
மோகனப் புன்னகையும், ஈரச்செவ்விதழ்களும் என்னை மயக்க
பூங்குழலும்-பசும்பொன்னில் செதுக்கிய கட்டுடலும்-
காபி ராகத்தை இசைக்க, மனதிலோ மந்த மாருதம்
நெஞ்சமோ கானம் பாடும் கோகிலம்

வட்ட முகமும், வண்ணக் கருவிழிகளும், நெற்றிப் பொட்டும்-
வெண்ணிலவே, என் காதல் வானில் உலாவரும் பெண்ணிலவு
குமுத வாயில் காதல் அமுதை அள்ளித் தந்த கன்னியாள்
என் வாழ்வில் காதலின் புதுவரவு

கட்டிக் கரும்பில் செதுக்கிய பொன்மேனி
காமன் மலர்க்கணையாய் என்னை தாக்கி
கலையாய் உண்டு காதல் பசியாறு என்றே கெஞ்ச
என்னே! நான் பெற்ற காதல் வரம்

கண்ணால் இதயம் கொத்தும் காதல் மீன் கொத்தி-
கள்ளச் சிரிப்பால் இதயத்தை கொள்ளையடித்த
காதல் கொள்ளைக்காரி, கண்டே காதல் கொண்டேன்
மகிழ்ந்தேன், காதல் வெள்ளத்தில் மூழ்கி மறைந்தேன்

கொதிக்கும் நெஞ்சம் காதல் அமுதை அள்ளிப் பருகிட
முருகன் தேடிய குறவஞ்சியாய்,
ஸ்ரீராமன் தேடிய சீதையாய் என்னவள் இவள்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-28-06-2023

பொய்கையும்- பூவையும்

பொய்கையில் கண்டது வண்ணக் குமுதமோ
இதயம் சுவைத்தது அமுதமோ? விழிகளும் மயங்க
கனிமொழிகளால் மனமும் கிறங்க
வந்தவள் வான் நிலவோ? தேன் மலரோ?

பார்த்தேன் பார்த்தாள், நாணி நிலம் பார்த்த பூ விழிகளில்
வேலும் வில்லும் காமன் கணைகளாய்ப் படையெடுக்க
கண்களால் என்னைச் சிறையெடுத்த மோகனம்
கயல்களால் இதயம் கொத்திட மனதிலே பூபாளம்

வளை புருவங்கள் நெஞ்சை வில்லாய் வளைக்க-மதயானையின்
முகபாடமாய் குவி முலைகள் என்னை மயங்கடிக்க
அஞ்சா நெஞ்சத்து ஆடவனும் மயங்க, ஐம்படைகளும் புறமுதுகிட
அச்சம், மடம். நாணம், பயிர்ப்பு அணியாய் பூண்ட மங்கை
அழகின் அதிசய கங்கை.

விழிகளும் மலர் வனம், கார்குழலோ பூவனம்-பூ
மேனியில் வாசப் பூமணம், செவ்விதழ்களில் தேன் வனம்-
மனதிலோ காதலின் நறுமணம், பூங்கோதையோ
சூடிக் கொடுத்த பூவனம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-28-06-2023

பொன் மான்

பார்த்தேன், இரசித்தேன்-குவளை விழிகள், மொய்த்தேன்-
சுவைத்தேன்-இனிது விழித்தேன் எனக் களித்தேன்
நுகர்ந்தேன்-பூவாசம் அறிந்தேன்
மணந்தேன்-வாசப்பூ என மனம் மகிழ்ந்தேன்

இதழ்தேன்-சுவைத்தேன், இவள் மலைத்தேன் என மலைத்தேன்
அணைத்தேன், காதல் தீ வளர்த்தேன்-அணையாத் தீ
என அகமகிழ்ந்தேன், மொழித்தேன் சுவைத்தேன்
இசைத்தேன் என இசைத்தேன், தேன்மலர் குழல் கண்டு
மகிழ்ந்தேன், மதுவண்டென மனம் குழைந்தேன்

ஐம்புலனிலும் தேன் சிந்தும்-ஐந்திதழ்
அதிசய மலரிவள் எனப் புகழ்ந்தேன்-அறுசுவை
தாண்டிய ஏழாம் சுவை, ஏழ் சுரத்திலும் இனிய
காதல் சுரம் இவள் எனக் களித்தேன்

கன்னியோ அழகின் நந்தவனம்
பார்த்த விழிகளால், நெஞ்சில் பூத்த காதல் வனம்
இவளில்லா வாழ்வோ சோகவனம்
இவளோடு வாழும் வாழ்வோ அசோகவனம்

காதல் காதல் காதல்-காதல் போயின்
சாதல் சாதல் சாதலேயன்றி வேறில்லை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-28-06-2023

பொன்மானைத் தேடி

காதல் பூமழையில் நீராடி பெண்மை நாணிக் களிக்க
அள்ளி அணைத்து காதல் தீ வளர்த்து,-முத்தத்தால்
பொன் வீணையில் காதல் சுருதி கூட்டப், பூ விழி
சிவக்க, தொடங்கிய காதலின் அரங்கேற்றம்

பிளந்த கனிச்செவ்வாயில் அமுதருந்திப் போதை கொண்டு
பிறை நுதலில் இதழலால் பொட்டிட்டு, நிறை அழகை
சிறையிட்டு, நூலிடையை மேகலையாய் சுற்றியணைத்து
நெஞ்சில் எரியும் காதல் தீக்கு-நெய்யாய் -மெய் கலந்து-
ஆகுதியாய் தம்மை அளித்து யாத்த காதல் வேள்வி

மேகலையும் சினுங்க-நூலிடையும் சிவக்க, நகை சூடிய
தொப்புள் நாணிப் பூக்க, காஞ்சி இருக்க கலிங்கம் குலைய
கையணை கொண்டு மெய்யணை கட்ட, பொங்கிச் சிலிர்த்த
பொன் கலசங்கள் வேழமாய் மார்பில் மோதிக் களிக்க
காதற் சமரை காமனோடு போராடிக் களித்தே
காதலரும் களைத்தார், காதற் காமம் சுவைத்தார்

வெண்சங்குக் கழுத்தில் இதழ் பதித்து,
கண்படும் பசும் பொன்மேனியில் காதல் இசைத்து,
உயிர் மெய் சங்கமிக்கும் உறவை உணர்வோடு பகிர்ந்து-
காமச் சங்கத்தில் காதலின் அரங்கேற்றம்.

கங்கையும், கடலும் சங்கமிக்கும் பூம்புகாரில் புதுப் பிரவாகம்
ஈருடல் மறைந்து ஒருடலாகி, ஈருயிர் இணைந்து ஒருயிராக
காதலின் நவரசம், பஞ்சணைப் பூவை-நெஞ்சில் சூடி
கோதையை கோதி மகிழக், குவளை விழிகளில் பரவசம்

உயிரும் மெய்யும், ஒன்றாய்க் கலந்து இன்புற,
நூலிடை நொருங்காமல்-பூமேனி கசங்காமல்
ஊடும், பாவுமாய் காதல் தறி நூற்ற கலை இரகசியம்.
காமன் அறியாப் பரகசியம்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-28-06-2023

பூவை

மலரமர்ந்த பிரம்மனும் கலைமகள் எழில் கண்டு மயங்கினான்
மலரும் வீணா கானத்தில் தன்னை மறந்தே பூஜிக்கும் அழகாய்
பங்கயச் சாயலில் மங்கையை படைத்து பரவசத்தில் மூழ்கினான்

விழிகளோ குவளை, விரிந்த கைகளோ செங்காந்தள்
கோவையிதழ்களில் குறிஞ்சித்தேன், மும்மகளும் கலந்த
பேரழகு மலரில், வண்டமர வளையும் பூங்காம்பாய் நூலிடை

செஞ்சந்தனத் தொடைகள், செவ்வாழைக் கால்கள்
கவி மயங்கும் குவி முலைகளோ செம்மாங்கனி
வீசு தென்றலுக்கு வாசம் பூசும் சந்தனமேனி.

மோகனப் புன்னகையில் முத்துப்பற்கள் மின்ன
கார்குழலில் மல்லிகை பூத்து மணக்க
கண்பட்டு காளையர் காதல் நோயுறக் காதல் கிளி-
செவி கேட்டு சிந்தை சிலிர்த்து-காதல் துளிர்த்திட
கன்னி செப்புவதோ தேன்மொழி

மலரென்று மங்கையை மது வண்டு மோகிக்க-
அச்சத்தில் பங்கய மேனி செம்மை கொண்டு சோபிக்க
மலர்க்கரம் கொண்டு பூ முகம் காக்க, செங்காந்தள் என்றே
தேனீக்கள் பாடி குவளை விழிகளைச் சூழ
பூந்தாவணி கொண்டு கார்குழல் மூட
செம்மாங்கனி குவி முலைகளில் சொக்கித்த வண்டு
பவளச் செவ்வாயில் தேனருந்தப் பறந்து வந்த சிட்டு

வண்டு படு கூந்தலில்-வாசச் செண்டின் நறுமணம்
உண்டு சுவைக்க செவ்விதழ்களில் முக்கனியின் கனிரசம்
பிரம்மன் மனதிலும் காதலின் பிரவாகம்,
காமனும் மோகிக்க கன்னியோ திருமகளின் உருவகம்.
நாளும் நாம் சுவைக்க காதலின் பிரசாதம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-28-06-2023

பொருள்-ஆதாரம்

பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும்
பேசிடும் தாய் மொழியும் -மறந்தே
பொருள்தான் ஆதாரம் எனப் புரிந்தவர்
புலம் பெயர்ந்தார்-தமிழ் மறந்தார்

கலை என்றார்-தமிழ் கலாச்சாரம் என்றார்-கைகூப்பி
வாழ்த்திடும் வணக்கம் எம் உரிமை என்றார்
உயிர் மெய் கொண்ட தாய்மொழி-தமிழ்
தம் பிள்ளைகளுக்கு ஏனோ என்றார்.

வெள்ளையர் பூமியில் வேரூன்றி
புதிய உறவுகள் விழுதுவிட
அந்நிய மண்ணில் புதிய சந்ததி விதைத்தே
தொப்புள் கொடியை அறுத்தார்

கப்பங் கூழும், கம்பன் தமிழும் சொப்பனமாக
சொர்க்கம் என்றே கேட்பவர் மயங்கிட கதையளக்கின்றார்
காணாத தேசம் நின்று கானம் இசைக்கின்றார்
காலத்தே நிகழும் வெற்றுக் கச்சேரி,

சுற்றும் பூமி தன் அச்சை மாற்றவில்லை
சுழலும் வேகத்தை கூட்டவில்லை
சுற்றுப்பாதையை விட்டும் விலகவில்லை
சொந்த பந்தத்தை விட்டுப் பிரிந்ததில்லை.

சூரியக் குடும்பம் ஆதி தொட்டு அன்பை மறக்கவிலை
ஒன்றாய் ஆடும் ஆட்டத்தை இன்றும் நிறுத்தவில்லை
விரியும் பிரபஞ்சத்தில்-இவர்தம் ஆனந்தப் பயணம்
அன்பில்லாத மனங்களோ என்றும் மயானம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-28-06-2023

பொற்குடப் பவனி

பல காத தூரம் நடந்து, பரவசமாய் இறை புகழ் பாடி
பூம் பாவைகள் பாற்குடப் பவனி எடுக்கும் உலகில்
பொற்குடங்கள் மார்பில் குலுங்க, பொன்மேனியில்
அழகு மினுங்க, காவிரியில் நீர் மொள்ளும் மோகினிகள்

அன்ன நடையில், சின்ன இடையும் அசைந்தே
ஆண்களின் இதயத்தை அசைக்க
மோக நோயுற்று முதியோரும் வாடிட
மோகினிகளின் ஆடை அரங்கேற்றம்.

குலுங்கும் முன் அழகு இதயத்தைக் குலுக்க
மூடி மறைத்த துயரத்தால் இதயம் விம்ம
அழகிட்ட கோலங்களை ஆடையால் மறைத்த நிலவு
ஆண் மனதை ஆட்டுவிக்கும் பௌர்ணமிதான் என்னே அழகு

சீவாத செவ்விளநீர் இரண்டும் என்னைச் சீண்ட
சின்ன முயல் குட்டிகளாய் துள்ளும் அழகில் இதயமும் துவள
காமன் கணைபட்டேன், இராம பாணத்திலும் கொடிது
காம பாணம் அறிந்தே காதலை வரவேற்றேன்

கணை தாங்கும் நெஞ்சம் கன்னியர் அழகில்
காமன் கணை பட்டுத் துடிக்க-குலுங்கும் அழகில்
குமுறிடும் காமம் பொங்கித் திணறடிக்க
பூவைகளில்தான் எத்தனை காமன் கணைகள்-
புராணத்திலும் காமபாணத்தை வெல்லாத இயலாத
முனிகளின் அவல நிலைகள்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-28-06-2023

இராமாயணம்

பல தாரம் கொண்ட மன்னவனோ-ஒரு தாரத்திற்கு
ஈந்த வாக்கால்-தலைமகனும், தாரத்தோடும்,
தம்பியோடும் வனவாசம் போயிட-துயரத்தால் தசரதனும்,
மாண்டிட -தாரமே யம அவதாரமான அவலம்.

பொன்மானை விட்டு- பெண்மானை பிடிக்க-மாயமானை
ஈழமன்னவனும் ஏவிட, பெண்மானின் ஆசைக்காய்
பொன்மானை தேடி, கலைமானும் ஓடியே ஏமாறிட
அம்பு தைத்த மாரீசனும்-ஏமாற்றிட
அம்பாய் தைக்கும் அண்ணியின் மொழி கேட்டு
அன்புத் தம்பியும் ஏமாந்தான்
கோடு தாண்டிய பூங்கோதையும் ஏமாந்தாள்

கனிபோல் நெஞ்சை கவர்ந்தவளை முனிபோல் வந்து-
இராவணனும் ஏமாற்றிட, படிதாண்டிய பத்தினியும் சிறைப்பட்டு
பல்லாண்டு துயருற்றாள்,-அசோகவனத்தில்
துணையை தேடி கேவிக் கரையும் ஒற்றைக் குயிலானாள்.

பெண்மானுக்காய் நடந்த பெரு யுத்தம், தம்பியரும்-புதல்வரும்
தம்முயிர் ஈந்திட, பத்து தலையிருந்தும், பற்றி எரியும் காமம் தணிக்க
மன்னனுக்கோ போதாத ஞானம், பத்தினி துணையிருந்தும்-
சீதையின் மேல் ஆறாத காதல்-நெஞ்சில் தீராத மோகம்.

மண் விண் ஆண்டவனும் மாதின் மேல் கொண்ட காதலால்
மாண்பிழந்து மண்ணில் வீழ்ந்தான், பற்றி எரியும் தீயில் நீராட்டி
பத்தினி என் மனைவி என்றே பாரியை பார்த்தீபனும் ஏற்றான்.

பாதணி அரியணை அமர, பற்றறுத்த துறவியாய். நாடான்ற பரதன்
அண்ணன் வரத் தாமதிக்க தீக்குளிக்க முனைந்த அண்ணல்
அண்ணனும் திரும்பிட, அனலும் தணலும் தணிந்திட, மங்கலம் பொங்கிட
தம்பிகள் வாழ்த்திட அரியணை அமர்ந்த ஸ்ரீராமனோஅண்ணன்

நாடு துறந்தவன் நங்கையோ கோடு தாண்டித் துன்புற
கோல மன்னவனும் காமுகனாய் மாண்பிழந்து மாண்டிட
காடு போன இளவலும், தேவியோடு நாடு திரும்பி
அரியணை அமர்ந்திட மங்கலமாய் மலரும் இராம ராஜ்சியம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-29-06-2023

சங்கே முழங்கு

நாளும் மலரும் மலர்களைப்போல்
நம் மனங்களும் புதிதாய் மலர்ந்தால் எத்தனை அழகு
அன்பு, உண்மை, கருணை தேனாய்ச் சுரந்தால்
சொர்க்கமே அமைதி நிலவும் உலகு

இன, மத. மொழி, நிற பேதம் கடந்த உலகு
நாம் எல்லோரும் சகோதரர் என்ற உறவு
ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்றே கூவு
சமத்துவ சகோதரத்துவமே நம் தத்துவம்
சங்கே நீ முழங்கு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-06-2023

சாத்திரங்கள்

பிரம்மன் எழுதிய விதியோ, தலை விதி என்பார்
காலம் எழுதிய விதியாய்-கை இரேகை சாத்திரம் என்பார்
பிறந்த எண்ணிலும் சாத்திரம், நேரத்திலோ ஜாதகம், மெய்லிலோ
சாமுத்திரிகா லட்சணம், வாழ்விலோ நாளும் பஞ்சாங்கம்

நாடி சோதிடம்-கிளி சோதிடம்
குடு குடுப்பைகாரன் சோதிடம்
கோயில், மனை கட்டிட வாஸ்து சாத்திரம்
வாழ்விற்கு சோதிடமோ சோதனையான காலம்
ஏமாற்றிப் பிழைக்க சோதிடமும் வாழ்வாதாரம்.

மையிட்டு பொய்யுரைப்பார், பூப்போட்டு
சாமி வாக்குரைப்பார்
சோழி உருட்டி சோதிடம் சொல்வார்
மூகூர்த்த நேரமும், செவ்வாய் தோஷமும்
சோதிடர் எம் கையில் என்பார்.

பஞ்சம் பிழைக்கும் பார்பனர் கையிலோ
மூட சாத்திர-சம்பிரதாயங்கள்
மானுடம் சிறைபட்டு- சாதியத்தால் கறைபட
சமஸ்கிருதம் வேதமொழியாக-தமிழன்
வாழ்வோ சத்திய சோதனை

கன்னி கழியாத பெண்ணை-கன்னிகா தானம் செய்ய
சோமன், கந்தர்வன், அக்கினி சம்போகமாய்
சுவைத்து துப்பிய சக்கையை தாரமாய் ஏற்றேன்
எனச் சொல்லும் சோம பிரதமோ ஸ்லோகம்

பெண்மையைப் பழிக்கும் ஸ்லோகமோ சாத்திரம்
அக்கினி வளர்த்து புரியும் திருமணங்களோ
அநாகரிக பார்பனிய சம்பிரதாயம்?

நாளும், நேரமும் பார்த்து கட்டிய, நள தமயந்தி-
சீதா ராமன், பாஞ்சாலி திருமணங்களில் சோதனை
பாரதியும் கொதித்து பார்பனரைப் பழித்த வேதனை

வள்ளுவனும் பாடாத அறமாய், கல்லும் -அப்பமும்
தெய்வமாக, மதங்களை மூடர் படைத்தார்-மதங்கடந்து
சித்தனாய், விழிப்புணர்வில் வாழும் ஸென் மனிதர்

ஒவ்வொரு கல்யாண
வைபவத்திலும்,
சாஸ்திரப்படிச் சொல்லும்
வேத மந்திரங்களில்,
சோம பிரதமோ என்ற
ஸ்லோகம்
முதன்மையானது!
மணமகளாகிய இவளை,
சோமன், கந்தர்வன்
மற்றும் அக்னி ஆகிய
மூன்று தேவர்கள்
இஷ்டமாக அனுபவித்த
பின்னரே, நான்காவதாக
அவர்களிடமிருந்து
மணமகன் பெற்று
அனுபவிக்கிறான் என்று
சாஸ்திர நிர்ணயம்
இருக்கிறது! எனவே,
இந்த அரசி எப்படிப்
பத்தினி ஆவாள்?”

நானு திசையும் தீர்த்த யாத்திரை போனவர்
போனவராய்த் திரும்பிவந்தார்
தம்முள் தீர்த்தயாத்திரை போனவரோ
புதுப் பிறப்பாளராய் பிறந்து மகிஜழ்ந்தார்

ஞானி புத்தரும் வேதங்களை ஒதுக்கிட -பெரியாரும்
பொய்யும், காமமும் வாழும் புராணங்களை ஒதுக்கித்
தெய்வங்களைப் பழித்திட, பகுத்தறிவை வகுத்தறிய
விழிப்புணர்வை ஏற்றினார், பற்றிய தீபங்களோ
அணையவில்லை, அகப் புரட்சியும் ஓயவில்லை.

சாதியத்தீயும், சமஸ்கிருத வெறியும் தீரவில்லை
ஒன்றே குலம் ஒருவனே தேவன்-திராவிடன்
குரலும் ஓயவில்லை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-29-06-2023

சோம, பிரதமோ விவிதே இஷ்டே = சோமன், முதலில், பலவிதமாக அவளை அனுபவிக்கிறான்
கந்தர்வோ, உத்தரஹ விவித இஷ்டே = கந்தர்வன், அடுத்து, பலவிதமாக அவளை அனுபவிக்கிறான்
அக்னி, திரிதீயோ இஷ்டே = அக்னி, மூன்றாவதாக, அவளை அனுபவிக்கிறான்
மனுஷ்யஜாஹ், பதி ஸ்தூரி யஸ்தே = மனிதன், இவளின் ஆண்டையாக, இறுதியாக இழுக்கப்படுகிறான்!

மாங்கல்யம் தந்து = தாலிக் கயிற்றினை
அநேனா மம ஜீவன ஹேதுனா = நான் பல நாள் வாழ வேண்டி
கண்டே பத்நாமி = (உன்) கழுத்தில் கட்டுகிறேன்
சுபகே, த்வம் ஜீவ, சரதஸ் சதம் = சுமங்கலியே, உன்னால், என் ஆயுள்100 பலம் ஆகவேண்டும்!
நன்கு உற்றுப் பாருங்கள்! ஆணாகிய 'நான் வாழ' என்று தான் இருக்கும்; 'நாம் வாழ' என்பதே இருக்காது! பெண்ணாகிய உன்னால், ஆணாகிய நான் சுகப்படவே, இந்தக் கல்யாணம்! அதுவே வைதீகம்!

சிவப்பு விளக்கு

மீட்டிய வீணையில் மோகனம் ஒலிக்க, சூடிய மல்லிகையின்
வாசம் மணக்க, நீல விழிகளில் பௌர்ணமி சிரிக்க
பூத்த கனிகளில் மனமும் லயிக்க
பார்க்கத் திகட்டாத பருவத்தின் அழகு.

இலை மூடிய கனிகளை -அணில்களாய் விழிகள் கொத்த-
இவள் அழகில் காய்ந்து நிலவும் காதலாகி மெலிய
பார்த்தாலும் தீராது வளரும் காதல் பசி
பருவம் கடந்தாலும் திகட்டாத காதல் காமத்தின் ருசி

சூடிய மல்லிகையும் வாடாது உதிர, வாசப் பஞ்சணையும்
கசங்காது காய, பூசிய நறுமணமும் வாசம் குன்றாது வீச
சூடிய அலங்காரமும் கலையாது காய, சூடிய பொட்டும் -
நூலிடை சுற்றிய பட்டும் கசங்காது நிலைக்க
வழிமேல் விழி வைத்து-இராவணன் வருகைக்காய்
வாசலில் காத்திருந்த வைதேகி

குலமகளும் கற்பை அடமானம் வைக்கும் கொடிய கொரோனாக் காலத்தில்
விலைமகளோ-விற்றும் தீராத அழகையும், இளமையையும்
விலை பேசக் காத்திருக்க-கூடிப்படுக்க வாடிக்கையாளர் யாருமின்றி
வாடிப் படுத்த பஞ்சணை வியாபாரம்

தனி மனித இடைவெளி தாண்டி, இரு வரிக்குறளாய் இணைந்து
காமத்துப்பால் சுவைத்த காலம் கனவாக, கலைமகளாய்
ஆடிய நடனமும் காய்ந்து, கோகிலமாய் பாடிய பண்ணும் ஓய
திருமகளாய்க் குவித்த செல்வமும் மறைய
கட்டிய சலங்கையும் இசை மறந்திட, கொரோனா அச்சுறுத்த
நடை மெலிந்து, இடை மெலிந்தாள், வறுமை வாட்டும் பூங்கொடி

மாதவியும் கோவலனுக்காய் காத்திருக்க, மன்மத அம்பு தைத்த
மானுக்காய் கோதையும், பஞ்சணை விரித்திருக்க-அன்று
கோடு தாண்டிய பத்தினி சீதை அசோகவனத்தில் சிறையிருந்தாள்
இன்று கொரோனா கீறிய கோட்டை தாண்டாத கோவலன் மனமோ
மாதவி தேடி காவிரிக்கரையில் அலை பாய, சிலம்பொலி கேட்டு
சிந்தையும் கலைய, ஶ்ரீராமனாய் வீட்டில் சிறையிருந்தார்

நிலவும் தனியே வானில் காய-மலரும் தனியாய் குளத்தில் காய
பஞ்சணையும் கசங்காது காய, முற்றிப்பழுத்த கனியே
கொத்தும் பச்சை கிளிக்காய் பசியால் தவமிருக்கும் அவலம்

காமச் சூடு அறிந்த மன்மதன் தேவி, கெரோனாச் சூடு
அறியாத அப்பாவி, தனி மனித இடைவெளி தாண்டிய
அழகிய சிங்காரி ***காமத்துப்பால் வியாபாரி***

ஏழிசை தாண்டிய எட்டாம் சுரமாய்
மோகனம் இவள் கானம்- பூவை அழகோ
ஆண் மனங்களை ஆட்டுவிக்கும்
காமனின் மன்மத பாணம்.

காதல் நிலையும், காமக் கலையும், கஜீராகுவில் சிலையாக
உயிருக்குள் ஒளிந்த மன்மதக் கலையாக, படைப்பின் அலையாக
குலமகள் விட்டிலும்-விலைமகள் வீட்டிலும்
பாவ பண்ணியம் தாண்டிய வேதமாய்
பசிக்காய் ஏற்றிய சிவப்பு விளக்கு
மன்மதனுக்கு மாதவியின் சிருங்கார அழைப்பு
கோவலனுக்காய் கண்ணகியின் இதயத் துடிப்பு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-4-7-2023

சுடரும் விட்டிலும்

அந்தி சாயும் பொழுது, அமைதி பூத்த மாதா ஆலயத்தில்
அருள் பொங்கும் தேவதாய் முகம் இரு கரம் நீட்டி அழைக்க
கருணை பொங்கும் விழிகள் பரிவோடு அணைக்க-கரம் குவித்து
மனமுருகி செபிக்கும் தாய் விழிகளில் மாரியின் ஈரம்

உருகி எரியும் மெழுகு திரி ஒளியில் ஒளிரும் அன்னையின்
அழகு முகம் -கண்ணீர் வடிய உருகி செபிக்கும் ஏழைத்
தாயின் முகத்திலோ நீங்காத சோகம்.

ஒளி சிந்தி உருகும் மெழுகு மெதுவாய்க் கரைந்திட
நொருங்கிய உள்ளம் கண்ணீரோடு கலந்து விம்மிட,
ஓர் ஆறுதலின்றித் துடிக்கும் பெண்மை
பரிவோடும், கனிவோடும் கண்ணோக்கும் தாய்மை

கனிவான கணவன்-பணிவான மகன்
வாழ்வில் துன்பங்கள் வந்தாலும்-கவசமாய்க்
காத்திட தந்தையாம் இறைவன்

கல்வாரிச் சிலுவையும், மூன்றாம் நாள் வரைதான்
எல்லாம் இறை சித்தமென்று வாழ்ந்த உத்தமி
பெண்களுள் பேறுடையவள் நீரே, நானோ பாவி
துரதிஷ்டசாலி, எண்ணிய ஏழை மனம் குமுறி அழுதது.

கவர்ச்சியில் மயங்கி காதலில் வீழ்ந்து, காமத்தில்
மூன்று பிள்ளைகள் ஈந்து, காமம். கழிய, மோகம் மறைய,
வறுமை வாட்டிட-கட்டிய கணவனோ போதைக்கு அடிமை,
இளந் தாய்க்கு வாழ்வோ எரிநரகான கொடுமை

அதிகாலையில் எழுந்து சமைத்து, பிள்ளைகளைப்
பாடசாலைக்கு அனுப்பி, மலையேறி கொக்கோ பறித்து
மாலை வரை வெயிலிலும், மழையிலும், கடும் பனியிலும்
உழைத்துக் கறுத்து, அந்தியில் ஒரு பிடியுண்டு
உறவாடிக் களிக்க-உறங்கிடும் பிள்ளைகள்-

கனவாய்ப்போன வாழ்வை எண்ணி மனம் கலங்கிட
தள்ளாடி வந்து-நாளும் சண்டை பிடித்து தினக்கூலியை
பறித்து, குடிவெறியில் கூத்தாடும் கணவனோ சூதாடி
பேதையின் வாழ்வே நூலறுந்த காற்றாடி

அடியும். உதையும், வசையும், அன்னையின் வாழ்வாக-
அஞ்சி நடுங்கி, ஒடுங்கி, கண்ணீரோடு உறங்கும் குழந்தைகள்.
போதை தெளிய-காமம் முளைக்க கட்டியவளை
வல்லாங்கு செய்து காமவெறி தணிக்கும் காமுகன்

காதல் மணமும் கலைந்த கனவாக, குழந்தைகளின்
வாழ்வோ எரி நரகாக-உழைத்துக், களைத்து,
அடி, உதை வசைகளில் சிதைந்து , உள்ளம் நலிந்து-
வல்லுறவுக்கு பலியாகி வாழும் வாழ்வு போதும் என்றாகிட
ஆறுதல் வேண்டி அன்னையை நோக்கி புலம்பும் தாய் மனம்

ஈரவிழிகள் அன்னையை நோக்கிட
இதயம் ஆறுதல் வேண்டி மன்றாடி களைத்திட
ஆடும் சுடரில்-அழகாய் விளையாடி
வெந்து வீழும் விட்டில் பூச்சி இவள்தானோ?

அழுது ஜெபித்தவள் நெஞ்சில் ஆறுதல் பூத்திட
அன்னையை நோக்கி அன்போடு புன்னகைத்தவள் விழிகளில்
விழுந்து, எழுந்து சிலுவையைச் சுமந்து நடக்கும்
இறைமகனின் அவலக்கோலம் கண்ணில் பட, விம்மினாள்

கனத்த நெஞ்சுக்குள் கணவனே விஷமாக, கழுத்தை நெரிக்கும்
வாழ்க்கைச் சுமையோ சிலுவையிலும் பெரும் பரமாக-
இளமையும் எழிலும் கலைந்த கோலமாக-நரையோடிய குழலும்,
நலிந்த ஆடையும், அடிதாங்கி கன்றிய உடலும்-சிவந்த விழிகளும்.
ஆண்குறியால் அவமானப் படும் இரவுகளும், கலையாத இருளாய்
நாளும் தொடர, கல்வாரிப் பயணமான அபலையின் வாழ்வு

எரியும் சுடர் ஒளியில்-மாதாவின் விழிகளில்
கண்ணீர் மலர்கள், மங்கையின் நெஞ்சுக்குள்
ஓயாத சோக அலைகள்

குருவானவர் முன் சுற்றமும், சொந்தமும் சாட்சியாக
நோயிலும், நலத்திலும், வளத்திலும், வறுமையிலும்-
காலமெல்லாம் மரணம் மட்டும் பிரியாது வாழ்வோம்
உறுதி மொழி எடுத்து, உணர்ச்சி பொங்க மகிழ்ந்து
புரிந்த காதல் திருமணம்-பொய்யானது, கனவானது

மாற்றிய மணமாலைகள் மணமிழந்து வாடிட -மணமொத்துப் புரிந்த
புனிதமான விவாகத்தில் புரிதலும், அன்புமின்றி விரிசல் விழுந்திட
திருவும், மணமுமில்லா திருமணங்கள்-பாலியல்
வல்லுறவாய் நாறிட, பலிகடாவாய் பெண் மனங்கள்.

கணவன், மனைவி உறவும் பொய்யாகி, குழந்தைகள் வாழ்வும்
கேள்விக்குறியாகிட, காதலும், காமமும் வெறும் உடற்பசிதானோ?
கூலியின்றி காமப் பசிபோக்கிடநாளும் மனைவி என்றாள்
கூடி வாழத் திருமணமும், வேதமும் ஏனோ?

கணவனிடம் தாயே நீ அடிபட்டதில்லை
காமுகனாய்-கணவனும் உன்னைச் சிதைத்ததில்லை
குடிகாரனுக்கும் நீ மனைவியில்லை, குளிர் மழை பாராது
கொடு வெயிலிலும், உன் பிள்ளைகளுக்காய்-மரியே
மயைேறி, மாடாய் நீ உழைத்ததில்லை

என் வாழ்வில் நாளும் இதுதான்
நரகம் இதனிலும் கொடிதா-தாயே
அறிந்தால் சொல்வாய் ஆறுதல் நீதான்?
அம்மா இறைமகன் தாயே!

மனதுருகி ஜெபித்த அன்னை, மனம் குளிர
தன் குழந்தைகளுக்காய் சிலுவை சுமக்கும் தாய்மை
உழைப்போ போதைக்கு காணிக்கை,-பேதை
உடலோ கணவனுக்கு காமப்பலியாகும் வாடிக்கை

எரி நரகான வாழ்வில்- நிம்மதி -எட்டாத
வான் நிலவான சோதனை, மனதிலே
மாறாத வேதனை
வாழ்வோ நாளும் கல்வாரிப் பலி
ஏழை நெஞ்சில் என்றும் மாறாத வலி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-5-7-2023

சூடாத மலர்

கண்ணுக்கு மை வைத்தாள், கார் குழலிற்கு மலர் வைத்தாள்
செவ்வாயில் செந்தேன் வைத்தாள், மதி நுதலுக்கு திலகம் வைத்தாள்
காதல் பூவனத்தில் பூத்த மலர், ஏனோ என்னைத்-தன்
பூமனதில பூவாய் சூட மறந்தாள்

அலையும் கடலாய்-இதயம் அவளைத் தினம் தேடும்
கலையாத கனவாய்-மனம் தினம் அவளைக் காணும்
என் இதயத்தில் அவளோ அழியாத கோலம்
அவள் இதயத்தில் நானோ இல்லாத அலங்கோலம்

அழகென்றேன்-அவளோ தேவதை
நிலவென்றேன் அவளோ பௌர்ணமி
கனி என்றேன் கன்னியோ மாங்கனி
பூ என்றேன் பூவையோ மல்லிகை

காதல் மது என்றேன மாதோ வானமுது
வசந்தம் என்றேன், என் வாழ்வு நீதான் என்றேன்
காதல் வரம் தா என்றே, தவமாய்த் தவமிருந்தேன்

வண்டாய் சுற்றும் என்னைக் கண்டு
மலர்விழி அருள் புரிந்தாள்-மனதில்
மலராய்ச் சூடி காதல் வரம் தந்த கோதை
நாணச் செம்மை பூண்ட ராதை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-5-7-2023

சுவாசக்காற்று

அந்திவானில் வண்ணக் கோலங்கள் மெல்ல மறைந்திட,
ஆசுவாசமாய் பறந்து வீடு திரும்பும் புள்ளினங்கள்
கரை வந்து கால்களை வருடிடும் சிற்றலைகள்
கனிவோடு என்னைத் தழுவும் சீதளத் தென்றல்

ஆனந்த அரவணைப்பில் மெய்மறந்து மனம் களிக்க
மேனி சிலிர்க்க, என்னுள் பொங்கும் இன்பம்
பேரின்ப சுகத்தை காட்டிட என்னை மறந்தேன்

வண்ண நிலவு வானில் உலாவர
நட்சத்திரப் பூத்தூவி வரவேற்கும் கருவானம்
ஆற்றில் மீன்கள் துள்ளி விளையாடிட
வெள்ளியாய் ஜொலிக்கும் நீர்ப்பரப்பு

என்னுள் ஓசையின்றி உள்நுழைந்து வெளியேறும் உயிர்க்காற்று-
மௌனம் சூழ்ந்திட , நெஞ்சம் தியானத்தில் ஆழ்ந்திட
ஒவ்வொரு மூச்சிலும் என்னை வாழவைக்கும் உயிர்க்காற்று
வந்து போவதை உணர்கின்றேன்.

வாழ்வும் சாவும் உலவிடும் காற்றை-
உள்ளம் ஒருபோதும் புகழ்ந்ததில்லை
என்னைப் பிணைத்த ஈர்ப்பு விசையை
மனம் வாழ்த்தியதில்லை

வாழ்வின் அதிசயங்களை
வரமாய் எண்ணிப் பார்கின்றேன்,
வியந்து களிக்கின்றேன்

இயற்கையின் கொடைகளுக்காய் நன்றி சொல்கின்றேன்.
அமுதைப் பொழியும் நிலவு, என்னைத் தாங்கும் பூமி-
வேகம் மாறாமல் வாழ்வே நடனம் என தோழியரோடு
துணைவன் பகலவனைச் சுற்றி கும்மி ஆடும் பூமி

உள்ளும் பறமும் நீரும் நெருப்பும்-இருளும், ஒளியும்,
வாழ்வும் சாவுமாய் உறவு சொல்லிட
அழியாத ஆன்மாவின் முடியாத பயணம்.
ஓசையின்றி ஒவ்வொரு கணமாய் உயிர் வாழ
சுவாசமாய் வந்து போகும் உயிர்க்காற்று
இதயம் சிலிர்க்க-எழுந்து நடக்கின்றேன்

என்னைத் தாங்கிப் பிடிக்கும் பூமித்தாயின் கரங்களாய்-
புவியீர்ப்பு வியந்து மெல்லச் சிரித்து
முழங்கால் படியிட்டு கண் மூடி
கரங்குவித்து-ஐம்புலனும், அறிவும் ஒடுங்க
இறைவனை துதிக்கின்றேன்

எங்கும் நீயே-எல்லாம் நீயே!
நான் என்று ஏதுமில்லை இருப்பது நீ ஒன்றே

காற்றாய், கடலாய், நீராய், நெருப்பாய்,
சடமாய் சக்தியாய், எங்கும் விரிந்த சூனிமாய்
ஆகாயமாய்-என்னைத் தாங்கிடும் பூமியாய்
ஈர்த்திடும் உருவில்லா இருப்பாய் இறைவன்
கடந்து போகின்றேன்-வியந்து போற்றுகின்றேன்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-5-7-2023

தாஜ்மஹால்

இதயத்திலோ இமயத்தைச் சுமக்கும் கனம்
இரு விழிகளிலும் கங்கை வடியும் ரணம்
என் நெஞ்சமோ கொதிக்கும் பாலைவனம்
என் உயிரே, மும்தாஜே- நீயில்லா உலகோ
அணையா நெருப்பெரியும் சூரியவனம்

நீயில்லா வாழ்வோ நிலவில்லாக் கருவானம்
பூவில்லா வனத்தில் காதல் பூந்தேனியின் சோக ரீங்காரம்
எண்ணித் துடித்து, ஏங்கி அழும் என் இதயத்தை தேற்ற
உன்னைத் தவிர யாரடி எனக்குண்டு? சொல்லடி கண்மணி

சோக நரகத்தில் நான் வெந்து சாக
சொர்கத்தில் நீயும் கண்ணீரில் மூழ்க
வாடாத காதல் மலரே ஏனடி வாடிப்போனாய்?
வற்றாத காதல் நதியே ஏனடி காய்ந்து மறைந்தாய்?

உன்னைக் காணாமல் அந்தகனாய் உள்ளம் தவிக்க
பூமேனி தழுவாமல் தேகமோ தீக்குளிக்க
முத்தச்சுவைக்காய் விடாய்க்கும் காதல் இதயம்
மும்தாஜ் இல்லாமல் வாடும் மலர் மஞ்சம்

நீயில்லாத மாளிகையும் மயானமாய் மாறிட
முகலாய அரியணையும் நெருப்பாய் சுட்டிட-உன்
காதலன் கண்களில் ஓயாத கார்கால மழையடி
ஷாஜகான் வாழ்விலோ இனி விடியாத இரவுகளடி

கொவ்வை இதழ்களில் தேனும் மதுவும் இனிக்க
பூங்குயிலின் மொழிகளில் கவிதையும், கானமும் ஒலிக்க
அன்னத்தின் கால் கொலுசில் கல்யாணியும்,
தர்பாரும் இசைந்தே இசைக்க என்னை மறந்தேன்

பூமேனியில் முல்லையும், மல்லிகையும் மணக்க
மதி நுதலும், மை விழிகளும் காமன் கணைகளாய் வருத்த
காதலே உன்னோடு வாழ்ந்த காலம் சொர்க்கமடி
உன்னைப் பிரிந்த ஒவ்வொரு நொடியும் நரகமடி.

அன்றில் பறவையாய் தவிக்கின்றேன்
ஒற்றைக்குயிலாய் கரைகின்றேன்.
என்னுயிரே ஏனடி என்னைப் பிரிந்தாய்?

பூந்துகிலாய் என்னை மூடி, வாசத் தென்றலாய் என்னைத் தழுவி
இதயமாய் என்னுள் துடித்து, உதிரமாய் என்னுள் ஓடி, உயிர்க்காற்றாய்
என்னுள் உலாவி, உணர்வாய் என்னுள் பரவிக் கிடந்தவளே, ஏனடி
இந்த உறக்கம்? ஏனடி இந்த மௌனம்?

விழி திறந்து ஒரு மொழி சொல்லடி என் மனத்துயர் ஆற-
ஆரத்தழுவி ஒரு முறை தேற்றடி-சோகத்
தீயில் வேகும் என் தேகம் குளிர

என்னுயிரே மும்தாஜே-உன் பொன்னுடலை விதைத்த மண்ணை
திருமண்ணாய் என்னுடலில் பூசி -கண்மணியே
நீ கண்ணயரக் கட்டிவைத்தேன்
காதல் மாளிகையாய் மும்தாஜ் மஹாலை

பொன்மானே கலங்காதே காலம் வருமுன்-
உனைத்தேடி வருவேன், உன்னுள் துடிப்பது என் இதயமடி
என்னுள் தவிப்பதும் உன்னிதயமடி-கண்மணி
இது நாம் மட்டும் அறிந்த காதலின் இரகசியமடி

தாஜ்மஹால் இது கல்லறையல்ல-காதல் இதயங்களின்
சங்கமம், இது கல்லும் உளியும் தீட்டிய சிற்பமல்ல
இதயமும் உணர்வும் செதுக்கிய காதல் கோயில்

இது விசுவகர்மாவின் வேலைப்படல்ல
ஷாஜகானின் தேவராகம், இது இரவிவர்மாவின்
சித்திரமல்ல, மும்தாஜின் காயத்ரி மந்திரம்

இது விரல்களும் வீணையும் மீட்டிய இசைக்கோலமல்ல
காதல் இதயங்களின் அழியாத கோலம்
இது மண்ணில் எழுப்பிய பளிங்கின் அற்புதமல்ல
காலத்தால் அழியாத தெய்வீக காதலின்-புத்துயிர்ப்பூ

என்னயிரே மும்தாஜே!,உன்னுடலை புதைத்து-
உன் நினைவை என் நெஞ்சில் விதைத்து,
வாழும் நம் காதலை தாஜ்மஹாலாய் பளிங்கில் வடித்தேன்
விண்ணும், மண்ணும் உள்ளவரை நம் காதலுக்கு இது சாட்சியடி
என்றும் வளர் பிறையாய் வாழும் நம் இறவாக் காதலும்
நாளைய காதலர்க்கு புதிய வேதமடி

கண்பார்த்து நெஞ்செழுதிய அன்புக் காவியமே
வானூரும் நிலவும்- தேனூறும் மலர்களும் சாட்சியாய்
என் சித்தம், நினைப்பு, செய்கை உள்ளவரை
என் உள்ளம் ஒரு போதும் உன்னை மறவாது.
உன் அருகில் என் உடலும் உறங்க மறவாது.

காலத்தால் அழியாத நம் காதலும்,
காலமெல்லாம் இங்கே வாழுமடி
காதலர் நெஞ்சில் நம் பெயரும் ஆனந்த கானமடி

என் சமாதியில் விளக்குகள் வேண்டாம்
விட்டில்கள் விளையாடி மடிந்துவிடும்-வண்ண
மலர்கள் வேண்டாம் ஒரு மாலைக்குள் வாடிவிடும்
கண்ணீர் வேண்டாம், காதலர் நெஞ்சம் உடைந்துவிடும்.

காதலால் நொருங்கிட்ட என் இதயத்தை
கனக்கும் சுமைகளால் யா அல்ல இனியும் நொறுக்காதே
சுமப்பதற்கு என் இதயத்தில் வலுவில்லை
வடிப்பதற்கு என் விழிகளில் கண்ணீரில்லை

நின் கருணையை நினைந்தே உருகிடும்
என் இதயத்தின் நன்றியை ஏற்பாயே
என்னே நின் கருணை என் அல்லா
மாஷா அல்லா ! சுபான் அல்லா!

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-5-7-2023

தைப்பொங்கல்

ஆண்டுகள் பல போனபின்பும்-அகதிகள்
வாழ்வில் மாற்றமில்லை
அரசியல் கைதிகள் வீடு திரும்பவில்லை
காணாமல் ஆக்கப்பட்டோர் கதி தெரியவில்லை

கண்ணீர் நதிகள் வற்றவில்லை-அநாதை,
விதவை, அங்கவீனருக்கு விடியல் இல்லை
புவி வெப்பமடைதல் குறையவில்லை
ஓஸோனின் காயம் ஆறவில்லை
உலக அமைதியோ கேள்விக்குறியான நிலை

குமுறும் நெஞ்சுக்குள் நாளும் சோகப் பொங்கல்-
இருந்தும் நம்பிக்கையோடு-பொங்கல் திருநாள்
வாழ்த்து கூறுகின்றேன், நமக்கும் விடியல் உண்டென்று
உலகில் அமைதி பிறக்குமென்று
எமக்கும் சுதந்திரம் கிடைக்குமென்று

சோகத் தீயில் பொங்கும் ஈழத் தமிழர் மனசு-
கண்ணீர் மழையில் நனைந்தும் கல்லான பேரினவாத அரசு
ஒரு நாள் கனியுமென்று நாம் காத்திருப்போம்
விடியல் வருமென்று பொறுத்திருப்போம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-5-7-2023

தறியும், புல்லாங் குழலும்

காதல் நெய்யாத கன்னி வண்ணச் சேலை நெய்ய
“டக்-டடக்-டக்-டக்-டடக்”-
தறியடிக்கும் இசை-தாளமாய் ஒலிக்க
ஊடும், பாவும் இசைந்து கலந்திட, தறி வழியே
மேகம் களைந்த புது நிலவாய் முகம் காட்டும்
தங்கக் கரைபோட்ட கூறைச்சேலை
கண்டதும் காளையர் நெஞ்சம் காதல் நெய்ய
கண்படும் பாவையோ பேரழகுச்சோலை

காற்றில் வந்த வேணுகானம் கன்னி மனதை மயக்க
வண்ணப் பூமுகத்தில் குறும் புன்னகை பூக்க
யன்னல் வழி நோக்கிய விழிகள், யாதுமறியாது விழி மூடி
வேனுகானமிசைக்கும் இளைஞனை கண்டதும்
தறியாய் இதயம் துடித்தே, காதல் நெய்யத் தவித்ததே

உள்ளம் புது அல்லியாய் மலர, யாரிவர்?
இதுவரை காணாத புது முகம்
நிலவுக்குள் ஒரு நிலவாய் உலவும் நினைவு
தன் நிலை சொல்ல -நாணிப்பூத்த பூவை

தறி ஓய, கான மழையும் ஓய, தறி தொடர,
கான மழையும் பொழிய, தன்னைத் தொடரும்
கானத்தை அறிய, தவிப்போடு யன்னல் வழி அலையும்
கயல் விழிகள், தறி ஒலியோடு தாளம் தப்பாமல்
இசை பொழியும் காதல் மொழிகள்

பொட்டு வைத்த வட்ட நிலா, பூ முகத்தை காட்ட
மதுமலர் கண்ட வண்டாய் முகம் மலர்ந்த காளை
குழலிசைத்து, கன்னி நெஞ்சை தொட
கண்ணன் ராதையாய் மாறிட்ட காதலர் இன்ப நிலைகள்

கண்ணோடு கண் உரசக்-காதல் பூத்துக் குலுங்க
மதுவண்டும், தேன் மலருமாய் விழிகள் உறவாட
ஊடும், பாவுமாய் உள்ளங்கள் கலந்து
அழியாக் காதலை அழகாய் நெய்தனவே

யன்னல் நிலா கண்டு,
கான மழை பொழியும் காளை
கொஞ்சும் புறா கண்டு-நெஞ்சில்
காதல் தறியடிக்கும் பாவை

“ஊடும்”, “பாவுமாய்” உள்ளங்கள்
பின்னிப் பிணைந்து காதல் நெய்ய
கண்வழி நுழைந்து நெஞ்சில் முளைத்த காதல்
கானம் பாடும் சோடிக் குயில்களாய் ஊடல்

இவள் விழிகள் பூவா, கயலா என மனம் வியக்க
இவன் விழிகள் பூவை எனை மொய்க்கும் மதுவண்டா-
தேனீயா , மங்கையும் நாணி வியக்க, விழிகள் கலந்து
மொழிகள் மறந்து- காதல் கள் அருந்திய போதையில்
யன்னல் வழி கடந்து, விண்ணில் பறந்த சோடிப் புறாக்கள்

கம்பியிட்ட யன்னலும் களித்து விலகிட
பெண்மை நாணி சிரித்தே தலை குனிந்திட
மூக்கோடு மூக்குரசி காதல் மொழி பேசும் கிளிகள்
முத்தச் சுவை கேட்டு தவிக்கும் மாடப்புறாக்கள்

வேல்விழியால் என் நெஞ்சை ஊடுருவிய ஊடு இவளே
பல பிறவி என்னோடு பிணைந்து வந்த பாவும் இவனே
காதல் நெய்யும் காதலர் இதயங்கள்
கானமாய் இசைந்தே ஒலிக்க காதலின் இன்ப சுரங்கள்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-5-7-2023

தாயே தெய்வம்

வாழ்வாதாரத்திற்காய் அவதாரங்களின் சிலைகளை
விற்றுப் பிழைக்கும் பெண்மையோ தாய்மையின் அவதாரம்
பூத்த புன்னகையில் கூடையும், பாரமோ?
குழந்தையோ காதலின் சாரம் எனும் அலங்காரம்

வலக்கரத்தால்-வாழ்வாதாரத்தை தாங்கியவள்
இதயம் துடிக்கும் இடப்புறத்தே இடுப்பில்
குழந்தையை ஏந்திய பெண்மை
மலர் முகத்தில் புன்னகை சூடிய-தாய்மை



சிலுவைச் சுமை கூட சிலமணிநேரம்-அன்னையின
வாழ்க்கைச் சுமையோ வாழ்நாட் காலம்,
நீண்டதோ, குறுகியதோ காலம் ஒரு பொருட்டல்ல
காத்திருத்தலும் பொருட்டல்ல, ஆணவம் கழித்து-
ஆன்மா கனிதலே வாழ்வின் இலக்கு

தாயின் பெருமைக்கு நிகரில்லை
வாழ்வும் இவளுக்கு சுமையில்லை
கீதை அறியாத யோகி
கர்மயோகம், ஞானயோகம், இராஜயோகம்
பக்தியோகம் வாழ்வான தபசி

யோகம் கடந்த வாழ்வில்-தாய்களுக்கு
தியாகிப் பட்டங்கள் இல்லை-
தாயைத் தவிர உலகில் வேறு தெய்வமில்லை
தாய்மையோ இறை அவதாரம் பொய்மையில்லை

கூடையில் கணவனைச் சுமந்த பத்தினி-நளாயினி
குழந்தைக்காய் தெய்வங்களைச் சுமக்கும் தாயோ
சிலையான தெய்வங்களினும் உத்தமி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-6-7-2023

தேன் மலர்

இதழ் கொண்டு-இதழ் தழுவி, இடை தழுவ-உடை நழுவ
இதழ் கடைந்து-இதழமுதம் பருகி இன்பத்தேன் சுவைத்தேன்
மலர்த்தேன் இதழ்கள், மலைத்தேன் மொழிகள்
வாசத்தேன் இவளை சுவாசித்தேன் காதலை யாசித்தேன்

குவளைத்தேன் விழிகள், கார்குழலில் வாசத்தேன் மலர்கள்,
பாசத்தேன் இவள் பருகத் தேன் இவள்
இளம் பருவத்தேன், என் இதயத் தேன் இவள்
என் நெஞ்சத் தேன் இவளை நேசித்தேன்-

மணந்தேன் இவள் மல்லிகை என வியந்தேன்
இவள் மனமும் தேன் என மகிழ்ந்தேன்
குறிஞ்சித்தேன் இவளை குடித்தேன்
காதலில் வெறித்தேன்-காமம் துறந்தேன்

கவிதையில் விளித்தே-கானத்தில் படித்தேன்
ஓவியமாய் வரைந்தே, அழகை காவியமாய்ப் படைத்தேன்
கலைஞனாய்-உயிர்த்தேன், என்னை மறந்தேன்,
வளரும் காதல் தீயை அணைத்தேன்
வளர்த்தேன்-காதலை சொல்ல மறந்தேன்

சொல்ல மறந்த கதையாய் காதல் செல்ல
காதலோ என்னை விட்டு கடல் கடந்து செல்ல
சோகத்தில்- காதல் வெள்ளத்தில்.மூழ்கித் தவித்தேன்

மூச்சை இழந்தேன், பேச்சை மறந்தேன்
எதிர் நீச்சல் துறந்தேன்
எல்லாம் மாயை என அறிந்தேன்.
தேவதாஸாய் அலைந்தேன்

மடிந்தேன்-சோகம் களைந்தேன்-மறுபடியும்
கவிஞனாய்ப் பிறந்தேன்-காதலுக்காய் தவமிருந்தேன்
காமன் மகளே வரம் தந்தாள்-காதல்
கணையால் குணம் தந்தாள்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-6-7-2023

உறவும், பிரிவும்

பொய்யான மெய் அழகில் மயங்கி, காமம் கண்ணை மறைக்க
மோகத்தில் காதல் என்றார், காமத் தீ எரிக்க-உன்னைப்
பிரியேன், மறவேன் மடிவேன் என்றே மணம் புரிந்தார்

ஆசையும், மோகமும் காலத்தே மறைந்திட
மெய்யின் பொய் அறிந்து-புரிதலின்றிப் புரிந்த மனம்-
மூச்சுத் திணறடிக்க, புனித மணத்தையும்
புரிந்த மணத்தையும் நாற்றம் என்றார்



உறவும் பிரிவும், ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக
சுண்டிப் பார்க்கும் உறவும், சுரண்டிப் பார்த்த அன்பும்
போலி நாணயம் எனச் சொல்ல, மெய் தீர்த்த பசியில் பூத்த
குழந்தைகளோ வண்ண மலர்கள், மோகத்தில் மலர்ந்த
கணவன் மனைவி உறவோ வெளிறிய காகிதப் பூக்கள்

தேனாய் இனித்த காதல் வேம்பாய் கசக்க, மல்லிகையாய்
பூத்து மணந்த மணவாழ்வும் நாறி வாடிட-நாளும்
நரகான குடும்ப வாழ்வில் கணவனோ அரக்கன்-பிரிந்து
தனியே குழந்தைகளோடு வாழ்ந்த தாய்மையோ தெய்வீகம்

பள்ளிக்கு குழந்தைகளை விடச் சென்ற அன்னையை
பின் தொடர்ந்த வஞ்சகம்-நெஞ்சில் ஈரமின்றி
வண்டியோடு உறவுக்குத் தீ வைத்து வஞ்சம் தீர்த்தது
பின் கத்தியால் குத்தி தன்னையும் மாய்த்தது

புன்னகைப் பூச்சூடி வாயினிக்க அம்மா என்றழைத்து
மகிழ்ந்த செல்வங்கள், தீச்சூடி கதறிக் கருகிட
கண்ணீர் பூச்சூடி தீச்சூடி-கருகி வெளியே விழுந்தும்
என் பிள்ளைகளைக் காப்பாற்றுங்கள் கதறிய தாய்மை

கொஞ்சும் கிளிகள் மூன்றும், அஞ்சிடும் தீயில் கருகிட
நெஞ்சு பதறிக் கதறிய தாயையும் தீ தீய்த்திட
கொடுந்தீயில் வெந்தவள்-பின்னர்
வைத்தியசாலையில் குணமின்றி இறந்தாள்

வளர்த்த தீயில் வார்த்த குழந்தைகள் தீய்ந்து கருக-
காதல் வளர்த்த மனதில்-கொலைவெறி காட்டுத் தீயாய்
எரிந்து பெருக, மனக்கலத்தலின்றி புரிந்த மணங்கள்
மாறிடும் உலகில் நாறிடும் ரணங்கள்.

வாழும் காலம் எல்லாம் நிலைக்க, காதலாகி மணம்
ஒத்துப் புரிந்த திருமணங்கள் வெகு விரைவில் காலாவதியாகி
மணமுறிவில் முடிந்திட, நல்லறமாய் வாழ வகுத்த இல்லறம்
நவீன உலகில் அறம் பிறழ்ந்த அவலம்தான் என்னே!

எரியும் வண்டிக்குள் எழுந்த அவலக் குரல்கள்
வளரும் தீயையும் சுட்டு வருத்திட-குழந்தைகளையும்
தாயையும் எரித்த தந்தையோ அரக்கன்
எரியம் தீயில் போரடிய தாய்மையோ தெய்வம்



தேகம் கண்டு, மோகம் கொண்டு, காதல் கொண்டு-
மணம் புரிந்து, தினவெடுத்த உணர்வுகள்
கோபம் கொண்டு திசை மாறிச் செல்ல, காதல் புனிதம்
கல்யாணம் தெய்வீகம் பொய்யானது.

இன்றும் மனிதன் மனிதனாய் இல்லை-விலங்கும்
பசிக்காய், குட்டிகளையும், துணையையும் கொன்று
பசியோ, பழியோ தீர்ப்பதில்லை

நானல்ல நீயே எல்லாம் என்பதே காதலின் கீதம்
இரு மனம் கலந்து-ஒரு மனமான புனித பந்தமே திருமணம் .
திருவின்றி, மணமின்றி, தெருவில் நடந்த கொடு மரணம்-
இலக்கணம் மாறிடக், காதல் இலக்கியம் மாறிய அவலம்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-28-06-2023

BRISBANE MURDER-SUICIDE: HOW COWARDLY RAMPAGE UNFOLDED

JANUARY, 2020

Queensland Police officers are called to a family violence incident that allegedly involved the couple.

WEDNESDAY FEBRUARY 19 - EARLY MORNING:
Rowan Charles Baxter, 42, is spotted filling a jerry can with fuel at a local service station.
8.20AM: *Baxter dives into his estranged wife Hannah Clarke's white Kia Sportage as she was preparing to do the school drop off on Raven Street, Camp Hill, a wealthy suburb of Brisbane.He douses Ms Clarke, 31, and their three children - Aaliyah, six, Laianah, four, and Trey, three - in petrol and sets the car alight. Neighbours hear an explosion which sounded like a 'gas bottle' blast. At least four explosions followed. Baxter grabs a knife from the SUV and stabs himself in the chest.He tries to stop neighbours from saving his wife and children before dying in the street.*
Ms Clarke escapes the burning car and screams: 'He's poured petrol on me.' Horrified witnesses see her skin peeling off her body.
One heroic neighbour hoses her down in an attempt to save her life and suffers burns himself. She is rushed to Royal Brisbane and Women's Hospital in a critical condition.
WEDNESDAY NIGHT:
Ms Clarke dies in hospital from the horrendous burns she suffered in the quadruple murder suicide

உதிரும் மலர்கள்

காலூன்ற இடமின்றி -ஏழ்கடலில் காதல் புறா என் பயணம்
கடல் புறாவே உன் இதயத்தில் களைப்பாற இடம் தேடி
என மனம் எழுதும் காதல் விண்ணப்பம்

கங்கைகள் விழிகளில் பாய, என் இசைக்கோலத்தில்-
ஒற்றை குயிலின் கானம் ஓயாது ஒலிக்க-இரு வரிக்குறளான
காதல் ஒன்று, சேராத இருவர் உள்ளத்தால்
ஒரு வரியில் மூழ்கியான அவலம்தான் என்னே!

காதலுக்கு வயதில்லை, காதலிக்கவும் வயதில்லை
காதல் இதயம் இருந்தால், எந்நாளும் காதலே

உதிர்ந்த மலர்கள், மீண்டும் மலர்வதில்லை
பிரிந்த மனங்கள் ஒன்று சேரக் காதல் தடையில்லை
காலம் காயத்தை ஆற்ற, கவிதையால் நான் உன்னைத் தேற்ற
என் காதலே என் காதலே என்னை மறவாதே?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-8-7-2023

வண்ணப் பூச்செண்டு

வண்ணப் பூச்செண்டு என்னருகே வந்தமர
வாசமோ சுவாசத்தை கிறங்கடிக்க
மனமோ தேன் வண்டாய் ரீங்காரமிசைக்க
கண்களால் காதல் தூண்டில் போடும் கயல்விழி
கயலாய் சிக்கி மகிழும் காளைக்கு காதலோ குபேரநிதி

உதிர்த்த புன்னகைப் பூக்கள், உவகையைப் பரிமாறிக் களிக்க
கனிந்த இதயங்கள் இடம் மாறித் துடிக்க
எண்ணமோ கவிதை எழுதி காதலைப் பரிசளிக்க
நாணிச் சிவந்த பாவை-காதல் வாசம் மணக்கும் பூவை

விலகி இருந்தும், நிலவும், மலருமாய் நெருக்கம்
கடலும், கரையுமாய் தழுவத் துடிக்கும் கண்களில் காதல்
அலைகளின் ஓயாத பெருக்கம், பார்த்து பரவசமாகும்
இதயம், பூத்துக் குலுங்கி பூவனமாய்ச் சிரிக்கும்

இதயங்கள் தழுவிக் களிக்க, இதழ்கள் விருந்து பரிமாறத் துடிக்க
காளை மனதில் கயல்விழிகள் போடும் காதல் கோலம்
கன்னி மனதில் காளை மனம் எழுதும் கவிதை ஜாலம்.

வண்ணவிழிகள் காதலைச் சொல்ல, வட்ட முகத்தில்-
புன்னகை வெண்ணிலாவாய் ஒளி சிந்த-சிந்தையில் உலாவரும்
காதல் தேன் நிலா, செவ்விதழ்களால் தேன் தந்த பெண்ணிலா

நெஞ்சில் படாந்த முல்லை, சுவாசத்தை நிறைத்த மல்லிகை
கண்ணில் நிறைந்த அழகோ பூவனம் உயிரில் கலந்த உறவோ
கவிதை இனம், செவிகளை நிறைத்த சப்தசுரம்
கண் வழி நுழைந்து, இதயத்தில் கலந்து -காதலாய் மலர்ந்து
உயிரில் கலந்து-பிரியாத உறவோடு காதல் திருமணம்

மனம் அழககைச் சுவைத்தே மலைக்க, நடையில்
அன்னமும் , குரலில் குயிலும் பூரித்து விளிக்க
அழகில் மயங்கி இதயம் களிப்பால் துடிக்க
எந்நாளும் காதல் வசந்தமாய் வாழ்வு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-8-7-2023

வண்ணத்தமிழ் பெண் ஒருத்தி

திங்களில் முகம் எடுத்து, செவ்வாய் இதழ் படைத்து
மொழியில் அமுதம் வைத்து, மின்னலில் இடை எடுத்து
மின்னும் முத்துக்களால் தொடுத்த பற்சரம்
பொன் கலசக் கொங்கைகளோ மதுரசம்

வில்லும் புருவமாகி, வேலும் விழிகளாகி
கொடியும், இடையாக, செவ்வாழைத் தொடையாக
ஆத்தாளை அழகில் குழைத்து
சந்தனத்தில் பிரம்மன் செதுக்கிய மோகனச்சிற்பம்

கண்டு விழிகள், காதல் போதையில் தள்ளாட,-
இட்ட அடிகளில் வெள்ளி கொலுசு இசைபாட
முத்துச்சிலையோ சந்திரோதயம்
தத்துக் கிளியோ என்தன் காதல் ஓவியம்

வியாழன் அளவு பூங்குழல் இடை தாண்டி அன்ன
நடையோடு உறவாட, இளஞாயிறு விழிகளில் ஒளிவீச
பொன் கிடைத்தாலும் கிடைப்பதற்கரிய புதனாய்
கண்டாலே போதை ஏறும் காதல் மதுரசம்

ஏழ் கடலும் என்னுள் -காதலாகி இவளிற்காய் அலைமோத
ஏழ் ஸ்வரங்களில் ராகம் எடுத்து உள்ளம் இசைமாலை தொடுக்க
ஏழ் ஏழ் ஜென்மத்திலும் எனக்காய் இவள் என்றே வரங்கேட்டு
ஏழு நாளும் காதல் தவமிருக்கும் காதலன் நான்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-8-7-2023

வியாழன்- பாம்பு
சனி- துன்பம்

விடியலில் வந்த வெண்ணிலா

விடியலில் வந்த கனவில், விரித்த மலர்க்கூந்தல் தோள் சாய
மலர்ந்த செவ்விதழ்களில் செந்தேன் பாய, முத்துப்பற்களும்
மோகனப் புன்னகையும் நெஞ்சை மயக்க, கண்டதும் இதயம்
கமலமாய் மலரக் காதலால் என்னை ஆட்கொண்ட தேவதை

காதல் வாசம் சுவாசத்தை நிறைக்க, கண்களுக்கு விருந்தாகும்
கட்டழகை இரசிப்பதா, சுவைப்பதா, காதல் போதையில் இதயம்
தடுமாறித் தவிக்க, காதல் பிரவாகத்தில் ஆனந்த கூத்தாடி
காதலாகி அவளைத் தேடும் மனம், கானக்குயிலே
ஜோடிக்குயிலாய் உன்னோடு கவிபாடத் துடிக்கும் தினம்

புத்தம் புது மலராய் பூத்து நீ சிரிக்க-என்தன் சித்தம், நினைப்பு,
செய்கையெல்லாம் கத்தும் கடலேலாய் அலைமோதிக் களிக்க
செவ்விதழ்களை கொஞ்சத் தவிக்கும் என்தன் நெஞ்சம்-கட்டுடலில்
மோகனராகம் இசைக்க துடிக்கும் என்தன் மஞ்சம்

கண்ணுக்கு விருந்தாய்-காதல் நோய்க்கு அருமருந்தாய்-
கன்னியும் காட்சி தர, நினைத்தேன் மெய் சிலிர்த்தேன்
மனம் சுவைத்தேன் -உயிர்த்தேன் காதலாகி புதுப்பிறப்படைந்தேன்
கன்னியே உன்னைச் சேரத்தான் நித்தம் காதல் தவமிருந்தேன்

விழி பார்த்துச் சுவைத்தேன்-நவரசத்தை இரசித்தேன்
இதழ் பார்த்து வியந்தேன் இவள் மலைத்தேனே என மலைத்தேன்
கட்டுடல் அணைத்தேன் காதல் தீ வளர்த்தேன்
பொற்குடமே-காதல் பூங்குடமே, எந்நாளும் உனை நெஞ்சில்
காதல் தேனாய் சுமந்தே காதலாகி நெஞ்சம் இளைத்தேன்

எரிந்தும் என்னை எரிக்காத காதல் தீயே
தைத்தும் என்னை வதைக்காத காமன் மலர்க்கணையே
கண்களால் நீ சூடிய காதல் மாலை நெஞ்சில் வாடாது மணக்க
உன் காதல் கவிதையை கானக்குயிலாய் நெஞ்சம் இசைக்க
மாலை சூட காத்திருக்கும் மணாளன் நான்

மனம் கொத்தி தின்னும் கன்னி, காதல் கிளி கொத்தாத மாங்கனி
மொழி எழுதாத மரபுக் கவிதை, கம்பனும் பாடாத காதல் தேவதை
வல்லினமும், இடையினமும் இல்லாத மெல்லினம்-
என் நெஞ்சில் மலர்ந்த காதல் பூவனம்

கருவானிலோ, தேய்ந்து வளரும் வெண்ணிலா
காளையின் மனவானிலோ என்றும் தேயாத காதல் நிலா
விடியலில் வந்த வெண்ணிலா என் நெஞ்சுக்குள்
உலாவும் பெண்ணிலா, கனவில் வந்த
தேன் நிலா திகட்டாத காதல் நிலா

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-9-7-2023

விலக்கப்பட்ட கனியா காமம்

அண்டை வளவில் போடியார் வைக்கோல் பட்டறை
அர்தராத்திரியில் ஆதங்கமாய் ஒலித்த குரலில்
ஓசியில் விதைக்க இது தரிசு நிலமல்ல
வேசியின் நிலமென்றாலும்-பேசிய காசு தரோணும்

கடன் சொல்லற வேலையா இது, விவஸ்தை கெட்ட
வேசி மகனே, திட்டித் தீர்க்கும் ஏழை மாது
“அற்றைப்பரிசத்துக்கும்” கடன் சொல்லும்
காமுகனுக்கு வாழ்வோ கேலிக்கையான சூது

மன்மத வேள்விக்கு மாமா வேலை பார்க்கும் குருஸ்
மாலை நேரச் சிங்காரிகளை தரம் பிரிப்பார்
பத்தினி என்பார், பகல் நிலா என்பார்
அந்தி மந்தாரை என்பார்
நித்திய கல்யாணி என்பார்-ஒருத்தியை
விளையாட்டுச் சாமான் -விலையும் கம்மி என்பார்

கட்டிய கச்சைகளும் காமத்தை அடக்கவில்லை
எட்டுமுழச் சேலைகளும் பெண்மையைக் காக்கவில்லை
உயிர் கொன்று உடல் தின்று வாழும் மிருகம்
ஒரு போதும் காமுகனாய் மாறுவதில்லை

உடல் விற்று உயிர் பிழைக்கும் ஏழ்மை
ஆண்மையில்லாத ஆணினத்தால் வந்த கொடுமை
விற்றுப் பிழைக்கவோ, பெண்மைக்கு விலையில்லா எழில்?
விபச்சாரமே, உலகின் மிகத் தொன்மையான தொழில்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-9-7-2023

அற்றைப்பரிசம்:- விலைமாதின் ஒரு நாட் கூலி

யாரிடம் செல்வோம் இறைவா

கொரோனோ உலகை ஆட்டிப்படைக்க, கொல்லும் உயிர்களை
காலன் விரைந்து களவாடிச் செல்ல-விழிகளில் கங்கை
இதயத்தில் அணையாத காங்கை

உலகப் பொருளாதாரம் வீழ்நதிட, ஊர் முடங்கி
எல்லைகள் மூடி, குடும்பங்கள் தனிமைச் சிறையிருக்க
வாழ்வாதாரம் இழந்த ஏழைகள் வாழ்வோ
ஆணிவேர் அறுந்த மரமான ஆழ் துயரம்.

மானுடம் அல்லாட, பசியும் அச்சமும் தலைவிரித்தாட
குலமகள் கற்பும் பசிப்பிணிக்கு அடமானமாகுமோ?
பேதை, பெதும்மை, மங்கை, மடந்தை அரிவை, தெரிவை, பெண்
எல்லாம் பேதமின்றி பாலியல் வன்முறைக்கு பலியாகுமோ?

அராஜகம் தலை தூக்குமோ? சட்டமும், ஒழுங்கும் நிலை குழைந்து
சர்வாதிகாரம் அரசோச்சுமோ? மானிட விழுமியங்கள் நிலை குலையுமோ?
அஞ்சிடும் மனம் ஆண்டவனை கெஞ்சிடும் தினம் தினம்.

அப்பளம் போட்டு, ஐஸ்பழம் விற்ற தொழில்களும்
அப்பளமாய் நொருங்கி, பனியாய் உருகிட
ஓடும் கண்ணீர் நதிகள்

உப்பளத் தொழிளாலர்-வாழ்வும் உப்பாய் கசந்திட-நாளும் ஓயாது
ஓடிய சரக்கு வண்டிகள் ஓய்ந்து உறங்கிட, வாழ்க்கை வண்டியும் முடங்கிட
கொரோனாவால் ஒடுங்கிய உலகு, ஆடல் மறந்த ஆலயமணிகள்
முடமாகி பாடல் மறந்திட பூஜைகள் இன்றிப் பூட்டப்பட்ட ஆலயங்கள்

கூடிக் கூவிய அதான் குயில்கள் ஓடி ஔிந்திட-தொழுகைகள் இன்றி
சோரும் பள்ளிவாயில்கள், காலையும், மாலையும் காற்றினில்
வந்த பிரித்தும் ஓய்ந்திட மௌனத்தில் மூழ்கிடும் விகாரைகள்

இறைவனும் மனிதனும் தனி மனித இடைவெளி தாண்டி
விண்ணில், மண்ணில் விலகி நின்ற அவலங்கள் தொடர்ந்திருக்க
ஆலயங்கள் -கோயில்களை நம்பி அர்ச்சனைப் பொருட்களும், மாலைகளும்
விற்றுப்பிழைத்த வியாபாரமும் படுத்திட, கும்பி கொதிக்க வாடும் குடும்பங்கள்
மாலையும் வணக்கமுமின்றி தூசி படிந்த கற்சிலைத் தெய்வங்கள்?
மிருகம், மனிதன், தெய்வம் மாறிடும் வாழ்வின் மூன்று நிலைகள்.

ஊடும் பாவும் ஒன்றொடொன்று இணையப், பண்ணாய் எழுந்து
பாடலாய் ஒலித்த விசைத்தறிகளின் இன்னிசை ஊமையாகிட
வறுமையின் இரைச்சல், வயிற்றில் தறியடிக்கும் பசியின் உரசல்

கடலோடி செல்வம் தேடிய காலம் கனவாக, கடற்றொழிலும்
புயல் அடித்த நிகழ்வாக, வறுமைப் புயலுக்கு ஒதுங்கிட வழியின்றி
கண்ணீரில் மனம் அலைபாய, பசி எனத் துடிக்கும் சொந்தம்
பசி போக்க அழைக்கும், கடல் தாயின் ஓயாத சத்தம்.
மீனவர் வாழ்வில் மீனுக்கும் பஞ்சம்.

பூந்தோப்பு விவசாயிகளும்- பூ விற்க வழியன்றி-புழு அரித்த
பூக்களாய் கருகி உதிர்ந்திட, பூ மணந்த வாழ்வில்- பிண
வாடையாய் அச்சத்தின் காயம், வறுமையின் நாற்றம்.

முற்றிய முக்கனிகளும் விற்றுப் பிழைக்க வழியின்றி விழுந்திட
அணிலும் வௌவாலும், கிளியும் விருந்தாடிக் களித்திட
மண்ணில் விழுந்தவை கண்டு மனம் குமுறிட
உண்ணவும், பகிரவும் ஆளின்றி விம்மும் மனசு

இரப்பர் பாலும் காய்ந்திட-பறிப்பாறின்றித் தேயிலைக் கொழுந்துகள் முற்றிட
காய்ந்த வயிறும், முற்றிய வறுமையும் கண்களில் சோகத்தை வரவழைக்க
நெருப்பைக் காணாத அடுப்பங்கரையில் உறங்க மறுக்கும் பூனைகள்-
பசி தீக்கும் வயிற்றில்-உலை வைக்க பிடி அரிசிக்கும் பஞ்சங்கள்.

கூலிகளாய் நாளும் உழைத்து, கொதிக்கும் வயிறு குளிர
கும்பி நிறைய கூழோ, கஞ்சோ குடித்து, சாலையோரங்களில்
உறங்கிய காலங்கள் ஆனந்தக் கனவானது
பழஞ்சோறும், கஞ்சும், கூழும் கனவிலும் அமுதானது
சேரியில் எலியும், பாம்பும் ஏழைகளின் உணவானது

உலகை அச்சுறுத்தி கொரோனாஆள, உருவில்லா மாயாவிக்கு
நாளும் ஆயிரமாயிரம் நரபலி-சோதிடமும்,
தீர்கதரிசனமும் பொய்யானது-தீண்டாமையை
வேதியரும் உணர்ந்திட தனி மனித இடைவெளி நீதியானது?

விரல் தழுவாது வீணையும் வாட, நாதஸ்வரமும் மேளமும்
மௌனத்தில் ஓய்ந்திட வனப்பிழந்த ஊர்கள்-தேரேறி
உலா வந்த தெய்வங்களும் கோயிலுக்குள் முடங்கிட-கொடி ஏற்றி
விழா எடுத்த கோயில்களும் மூடிக்கிடந்த அவலங்கள்

கல்விக்கூடங்கள் மூடிக்கிடக்க, நாளைய தலைமுறையின்
எதிர்காலம் கேள்விக்குறியாய் விறைத்து நிற்க
பொன்னான காலங்கள் மண்ணாக
மனதை அரிக்கும் கவலைக் கறையான்

அடுக்கி வைத்த நெல் மூட்டைகள் அநாதையாய் கிடக்க
மழையில் நனைந்து வெயில் காய்ந்து புழு, பூச்சி, எலி- உண்டு களிக்க
விளை நிலமோ-மழையில் நீராடி வெயிலில் காய்ந்து காடு மண்டிட
வறுமைக் காட்டில் வாழும் ,ஏழை விவசாயி நெஞ்சில் களையாய் முளைத்து
கண்ணீரில் தளைக்கும் கவலை..தூக்கு கயிறாய் அச்சுறுத்தும் கடன்
விளை நிலமும் விவசாயிக்கு புதை நிலமாய் மாறிடும் துயரம்?

பசு வளர்த்து-பால் கறந்து பாலும், தயிரும், நெய்யும் விற்ற காலம்
பண்டைக்காலமாக-பண்ணையில் கன்றும் குடித்துக் களிக்க
பால் மடி கறவாது கனக்க, தாய் பசு கதறி எஜமானை அழைக்க
பாலூற்றாது மடியும் உறவுகள் பாடை சுமக்க ஆளின்றி எரியும் கனவுகள்.

இருளில் ஓய்ந்து-ஒளியில் விழித்து, இருளும் ஒளியும் இசைந்தாட
இன்னிசையாய் தொடர்ந்த வாழ்வில்- தொழிலிழந்து வறுமை ஆட்கொள்ள
பசியும், பிணியும் உயிரச்சமும், மனநோயும் மானுடத்தை அலைக்கழிக்க
தெய்வத்தை கூவி அழைத்துக் கதறும் ஏழைகள்

பாலியல் விவாகங்களும், கற்பழிப்பும்
பெண்மைக்கு அச்சுறுத்தலாக-பெற்றோர்
முதியோர் யாருமற்ற அநாதைகளாக
மனித மாண்பும், தர்மமும் நிலை குலையுமோ?

உயிர்க்கொல்லி கொரோனா உலகை அச்சுறுத்தும் இருண்ட யுகம்
என்று மாறுமோ? இறைவா இயல்பு வாழ்க்கை என்று திரும்புமோ?

யாரிடம் செல்வோம் இறைவா
வாழ்வு தரும் வார்த்தையெல்லாம் உம்மிடமே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-9-7-2023

யாரிவள்-தேவதை

விழி சுவைக்க- அழகோ பேரழகு
இதழ் சுவைக்க, இதழ் சுவையோ தேனமுது
மொழி சுவைக்க கன்னி மொழியோ தேன் மொழி
கன்னியிவளோ காதல் கிளி கொத்தாத-மாங்கனி

மணம் சுவைக்க இவளோ, சந்தனம் கலந்த மந்தமாருதம்
மனம் சுவைக்க கன்னி மனமோ காதல் பூவனம்.
இவளில்லாத வாழ்வோ சஹாரப் பாலைவனம்.

புன்னகையில் வெண்முத்துக்கள் ஜொலிக்க, பூ மேனி வாசத்தில்
பூத்த மலர்களும் மயங்க, மையெழுதிய விழிகளில் இதயம் மயங்க
அன்ன நடையிலும் மின்னல் இடையிலும் பரதத்தின் பாவங்கள்
தேன் மொழியிலோ அபூர்வ ராகங்கள்-என் மனதிலோ
காதல் வைரஸின் தாக்கங்கள்

அழகால் நோயுற்று-தேவதாஸாய் துன்புற்று
காதல் தவமிருக்கும் என்னைப் பார்வதி உந்தன்
கார்குழலில் மல்லிகைச்சரமாய் சூடடி
பிறை நுதலில் திலகமாய் வையடி

நூலிடையில் மேகலையாய் மின்னிட
மான்விழிகளில் மையாய் நிலைத்திட
வரம் தருவாய் காதலி என் பார்வதி

பூங்குழல் ஆட, கள்ளிருக்கும் மலர்வனமாய் கன்னி கடந்து போக,
குழலோ, யாழோ எனத் தேன்மொழிகள் செவிகளில் பாய
கண்பட்டு காதல் நோயுற்ற என்னை வேல்விழியால் வீழ்த்தி
நாணப் புன்னகையால் காதலனாய் மாற்றிய அன்புக் காதலி

ன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-9-7-2023